பெருநகர சென்னை மாநகராட்சி

GREATER CHENNAI CORPORATION

# நிதி நிலை அறிக்கை

# 2024 - 2025

## மாண்புமிகு மேயர் அவர்களின்
## தொடக்க உரை

# கல்வி

1. **2024-2025ஆம் கல்வியாண்டில் மொத்தம் 419 பள்ளிகளில் LKG வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரையில் பயிலும் மாணாக்கர்களுக்கு பள்ளிச் சீருடைகள் வழங்கப்படும்.**

   அறிவிப்பு: **2024-2025 ஆம் கல்வியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சியில் கல்வித்துறையின் கீழ் உள்ள 208 தொடக்கப் பள்ளிகள், 130 நடுநிலைப்பள்ளிகள், 46 உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் 35 மேல்நிலைப்பள்ளிகளில், LKG வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு பள்ளிச் சீருடைகள் தலா 2 எண்ணிக்கையில் 1,20,175 மாணவ மாணவிகளுக்கு சீருடை துணிகள் ரூ. 8.50 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.**

2. **பள்ளி மாணாக்கர்களின் பாதுகாப்பு நலன் கருதி தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் இரண்டாம் கட்டமாக 255 பள்ளிகளில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்துதல்.**

   அறிவிப்பு: **2022 – 2023ம் ஆண்டு அறிவிப்புகளில் நடுநிலை, உயர்நிலை, மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில், மொத்தம் 159 பள்ளிகளுக்கு ரூ.5.47 கோடி மதிப்பீட்டில் 636 கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டதை தொடர்ந்து, 2024–2025-ஆம் கல்வியாண்டில் 117 தொடக்கப் பள்ளிகள் மற்றும் விரிவாக்கம் செய்யப்பட்ட 1,2,3,7,11,12,14 மற்றும் 15 ஆகிய மண்டலங்களுக்குட்பட்ட பகுதியிலிருந்து இணைக்கப்பட்ட பள்ளிகளையும் சேர்த்து மொத்தம் 255 பள்ளிகளுக்கு தலா 4 கேமராக்கள் வீதம் ரூ.7.64 கோடி மதிப்பீட்டில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்படும்.**

**3.** **208 தொடக்க மற்றும் 130 நடுநிலைப் பள்ளிகளில் LKG வகுப்பு முதல் 5-ஆம் வகுப்பு வரை பயிலும் 64,022 மாணாக்கர்களுக்கு ரூ.3.59 கோடி மதிப்பீட்டில் முதல் முறையாக 1 செட் Shoe மற்றும் 2 செட் Socks வழங்கப்படும்.**

**அறிவிப்பு: 2024-2025-ஆம் கல்வியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் கீழ் இயங்கி வரும் 208 தொடக்க மற்றும் 130 நடுநிலைப் பள்ளிகளில் LKG வகுப்பு முதல் 5 - ஆம் வகுப்பு வரை பயிலும் 64,022 மாணாக்கர்களின் சுகாதாரம் மற்றும் பாதப் பாதுகாப்பு நலனை கருத்தில் கொண்டு ரூ.3.59 கோடி மதிப்பீட்டில் அம்மாணாக்கர்களுக்கு 1 செட் Shoe மற்றும் 2 செட் காலுறைகள் வழங்கப்படும்.**

**4.** **பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் இயங்கும், தொழிற்பயிற்சி நிலையத்தை ரூ.3.00 கோடி செலவில் மேம்படுத்துதல்.**

**அறிவிப்பு: பெருநகர சென்னை மாநகராட்சியில் இராயப்பேட்டையில் செயல்பட்டு வரும் தொழிற்பயிற்சி நிலையத்தில் புதிதாக 2 வகுப்பறைகள் கட்டப்படும், பழுதடைந்த வகுப்பறைகள் பழுது பார்க்கப்படும், புதிய இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்படும், மாணவர்களுக்கு மிதிவண்டிகள், சீருடைகளும் வழங்கப்படும், இப்பணிகளுக்காக ரூ.3.00 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.**

**5.** **சென்னைப் பள்ளிகளில் உடனடி பழுது பார்க்கும் பணிக்கு (Imprest Amount) நிதி வழங்குதல்.**

சென்னைப் பள்ளிகளில் மின்சாதனங்கள், குடிநீர் குழாய்கள், கழிவறைகள் மற்றும் கழிவறை பாதைகளில் அவ்வப்போது ஏற்படும் சிறு சிறு பழுதுகளை சரி செய்வதற்கும் மற்றும் இதர செலவினங்களுக்கும் 2022-2023ஆம் கல்வியாண்டில் மண்டலம் 4,5,6,8,9,10 மற்றும் 13-க்குட்பட்ட பகுதிகளில் உள்ள 279 சென்னை பள்ளிகளுக்கு மொத்தம் ரூ.92.35 இலட்சம் Imprest Amount வழங்கப்பட்டது.

அறிவிப்பு : **2023-2024-**ஆம் நிதியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சியோடு புதிதாக இணைக்கப்பட்ட **1,2,3,7,11,12,14** மற்றும் **15** ஆகிய மண்டலங்களுக்கு உட்பட்ட பஞ்சாயத்து யூனியன் மற்றும் நகராட்சி பகுதிகளைச் சேர்ந்த **89** தொடக்கப் பள்ளிகள், **38** நடுநிலைப் பள்ளிகள், **8** உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் **3** மேல்நிலைப் பள்ளிகள் என மொத்தம் **138** பள்ளிகள் ஒப்படைக்கப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் தற்போது தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை **208** ஆகவும் நடுநிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை **130** ஆகவும் உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை **46** ஆகவும் மேல்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை **35** ஆகவும் உயர்ந்து மொத்த சென்னை பள்ளிகளின் எண்ணிக்கை **419-**ஆக உள்ளது. எனவே, தற்போது **2024-2025**ஆம் கல்வியாண்டில் **208** சென்னை தொடக்கப் பள்ளிகளுக்கு தலா ரூ.**25,000/-** வீதமும், **130** சென்னை நடுநிலைப் பள்ளிகளுக்கு தலா ரூ.**30,000/-** வீதமும், **46** உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் **35** சென்னை மேல்நிலைப் பள்ளிகள் என **81** பள்ளிகளுக்கு தலா ரூ.**50,000/-** வீதம் பெருநகர சென்னை மாநகராட்சியின் **419** சென்னை பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு மொத்தம் ரூ.**1.32** கோடி வழங்கப்படும்.

**6.** சென்னை உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களில், திறமை மிக்க மாணாக்கர்களை தேர்வு செய்து அவர்களுக்கு நேரடியாகவும் மற்றும் இணையதளம் வாயிலாகவும் **SCIENCE TECHNOLOGY ENGINEERING MATHEMATICS (STEM) ACADEMY OF EXCELLENCE** என்ற பயிற்சி பள்ளியில் சேர்த்து பயிற்சி வழங்குதல்.

அறிவிப்பு : பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் **9-**ல் இயங்கி வரும் சென்னை நுங்கம்பாக்கம் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் **SCIENCE TECHNOLOGY ENGINEERING MATHEMATICS (STEM) ACADEMY OF EXCELLENCE** என்ற பயிற்சி பள்ளி கடந்த **2021-2022-**ஆம் கல்வி ஆண்டு

பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்களுக்கான பிரத்தியேகமாக பயிற்சி வகுப்புகள் துவங்கப்பட்டு மூன்று ஆண்டுகளாக தொடர்ந்து சிறப்பான முறையில் நடைபெற்று வருகிறது. இதன் மூலம் இந்தியாவின் தலைசிறந்த கல்வி நிறுவனங்களில் மருத்துவம், பொறியியல், தொழில்நுட்பம், சட்டம் மற்றும் பேஷன் டெக்னாலஜி **(Fashion Technology)** ஆகிய துறைகளில் சேர வாய்ப்பினை பெற்றிருக்கின்றனர். இப்பயிற்சி பள்ளியில் **2023-2024-**ஆம் கல்வியாண்டில் **12-**ஆம் வகுப்பு மாணவர்களுடன், **11-**ஆம் வகுப்பு படிக்கும் மாணாக்கர்களும் அப்பயிற்சி பள்ளியில் சேர்க்கப்பட்டு மொத்தம் **80** மாணாக்கர்கள் பயின்று வருகிறார்கள். பெருநகர சென்னை மாநகராட்சி ஆளுகையின் கீழ் செயல்பட்டு வரும் பள்ளிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட **11 & 12-**ஆம் வகுப்பு பயிலும் மாணவர்கள் தங்கி கல்வி பயிலும் வசதி ஏற்படுத்தி கொடுத்துள்ளதால், மாணாக்கர்களிடையே இத்திட்டம் நல்ல வரவேற்பினை பெற்றுள்ளது. இத்திட்டத்தினை மேலும் விரிவுபடுத்தும் நோக்கத்தில், போட்டித் தேர்வுகளை எதிர்கொண்டு வெற்றிபெறும் வகையில் மாணாக்கர்களை தயார்படுத்தும் விதமாக **9-**ஆம் வகுப்பு முதல் **12-**ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்காக இப்பயிற்சித்திட்டத்திற்கு ரூ.**1.00** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**7.** பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித் துறையிலுள்ள **208** தொடக்க மற்றும் **130** நடுநிலைப்பள்ளிகள் என மொத்தமுள்ள **338** பள்ளிகளுக்கு தலா ஐந்து பச்சை வண்ணப்பலகைகள் வழங்குதல்.

அறிவிப்பு : பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித் துறையின் கீழுள்ள **208** தொடக்க மற்றும் **130** நடுநிலைப்பள்ளிகள் என மொத்தமுள்ள **338** பள்ளிகளுக்கு தலா ஐந்து பச்சை வண்ணப் பலகைகள் வீதம் மொத்தம் **1690** பச்சை வண்ண பலகைகள் ரூ.**92.95** இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**8.** **சென்னை மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்கள் தேசிய மாணவர் படை(NCC) மற்றும் சாரண, சாரணியர் இயக்கத்தில் கலந்துக்கொண்டு (Scout & Guides) பங்காற்றி வரும் மாணாக்கர்களுக்கு பயிற்சி மற்றும் சீருடைகள் வழங்குதல்.**

**அறிவிப்பு : 2024-2025 ஆம் கல்வியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 35 மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்கள் தேசிய மாணவர் படை மற்றும் சாரண, சாரணியர் இயக்கத்தில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டு பயிற்சி பெற்று வரும் 2050 மாணாக்கர்களுக்கு ரூ.66.00 இலட்சம் மதிப்பீட்டில் சீருடைகள் வழங்கப்படும்.**

**9.** **அனைத்து சென்னைப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கும் அடையாளஅட்டை (ID Card) வழங்குதல்.**

**அறிவிப்பு : 2024-2025ஆம் கல்வியாண்டில் மொத்தம் 419 சென்னைப் பள்ளிகளில் பயிலும் 1,20,175 மாணாக்கர்களுக்கு தன் விவரக்குறிப்பினை அறிந்து கொள்ளவும் மற்றும் பாதுகாப்பினை கருத்தில் கொண்டும் வண்ண அடையாளஅட்டை (ID Card) ரூ.61.00 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும்.**

**10.** **பெருநகர சென்னை மாநகராட்சியில் செயல்பட்டு வரும் இரண்டு சமுதாயக் கல்லூரிகளில் ரூ.50.00 இலட்சம் செலவில் மகளிர் முன்னேற்றத்திற்கான தொழிற்பயிற்சி அளிக்கப்படும்.**

**அறிவிப்பு : ஆழ்வார்பேட்டை மற்றும் புரசைவாக்கம் பகுதிகளில் செயல்பட்டு வரும் இரண்டு சமுதாயக் கல்லூரிகளில் முறையே ரூ.25.00 இலட்சம் செலவில் மகளிர் முன்னேற்றத்திற்கான தொழிற்பயிற்சி அளிக்க பயிற்றுநர் ஊதியம், பயிற்சிக்கான பொருட்கள் மற்றும் கட்டமைப்பு ஏற்படுத்தப்படும். இதற்காக ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

**11.** சென்னை தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 4 மற்றும் 5-ஆம் வகுப்பில் பயிலும் 24,700 மாணாக்கர்களை, சென்னையைச் சுற்றியுள்ள இடங்களுக்கு சுற்றுலா அழைத்துச் செல்லுதல்.

அறிவிப்பு : 2023-2024-ஆம் ஆண்டில் சென்னை மேல்நிலைப் பள்ளிகளில் பயின்ற 11ஆம் வகுப்பு மாணவர்களை கல்விச் சுற்றுலா அழைத்துச் சென்றதன் தொடர்ச்சியாக, மாணாக்கர்களுக்கு கற்றல் திறனை மேம்படுத்தும் விதமாக 2024-25ஆம் கல்வியாண்டில் 208 சென்னை தொடக்க பள்ளிகள் மற்றும் 130 நடுநிலைப் பள்ளிகளில் 4 மற்றும் 5-ஆம் வகுப்பில் பயிலும் 24,700 மாணாக்கர்களை, சென்னையைச் சுற்றியுள்ள கிண்டி சிறுவர் பூங்கா, பிர்லா கோளரங்கம், நூற்றாண்டு நூலகம், எழும்பூர் அருங்காட்சியகம், வண்டலூர் உயிரியல் பூங்கா ஆகிய இடங்களுக்கு பள்ளிச் சுற்றுலா அழைத்துச் செல்வதற்காக ரூ.47.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**12.** சென்னை மழலையர் பள்ளிகளில் (LKG & UKG) பயிலும் குழந்தைகளுக்கு திருத்தப்பட்ட பாடத்திட்டத்துடன் புத்தகங்கள் அச்சிடுதல்.

அறிவிப்பு : 2023-2024 ஆம் கல்வியாண்டில், முதற்கட்டமாக 204 சென்னை மழலையர் பள்ளிகளில் (LKG மற்றும் UKG) பயிலும், குழந்தைகளுக்கு ரூ.19.00 இலட்சம் செலவில் பாடப்புத்தகங்கள் அச்சிட்டு வழங்கப்பட்டது. மேலும், 2024-2025-ஆம் கல்வியாண்டில் 300 சென்னை மழலையர் பள்ளிகளில் (LKG மற்றும் UKG) பயிலும் குழந்தைகளுக்கு பாடத்திட்டத்தினை செம்மையாகவும், மாணவர்களின் ஆர்வத்தை தூண்டும் வகையிலும் செயல்பாடு அடிப்படையிலான கற்றல் (Activity Based Learning), எளிதாக புரிந்து கொள்ளும் வகையில், புதிய பாடத்திட்டங்களுடன், விலையில்லா வண்ணப்புத்தகங்கள் ரூ.40.32 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**13.** **சென்னைப் பள்ளிகளில் 6-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்கள் வளர்இளம் பருவத்தில், எதிர்கொள்ளும் பிரச்சனைகளை தவிர்ப்பதற்காக ரூ.35.00 இலட்சம் செலவில் 10 ஆலோசகர்கள் பணியமர்த்துதல்.**

அறிவிப்பு: சென்னை பள்ளிகளில் பயின்று வரும் வளர்இளம் பருவத்தில் உள்ள மாணாக்கர்கள் எதிர்கொள்ளும் உளவியல் ரீதியான பிரச்சனைகளை தவிர்ப்பதற்கு கடந்த ஆண்டில் 7 உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் இத்திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டது. இத்திட்டம், மாணாக்கர்கள் மற்றும் பெற்றோர்களிடையே நல்ல வரவேற்பு பெற்றதனால், 2024-2025-ஆம் கல்வியாண்டு முதல் அனைத்துப்பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்கள் பயன்பெறும் விதமாக விரிவுபடுத்தப்பட்டு மாநகராட்சிக்குட்பட்ட 10 வட்டாரங்களுக்கு தலா ஒரு ஆலோசகர் வீதம் 10 ஆலோசகர்கள் தற்காலிக பணியாளர்களாக நியமித்து உளவியல் ரீதியான ஆலோசனை வழங்கப்படும். இதற்காக ரூ.35.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**14.** **உடற்கல்வியை மேம்படுத்துவதற்காக விளையாட்டு கருவிகள் மற்றும் விளையாட்டில் சிறந்து விளங்கும் மாணாக்கர்களை சிறப்பு பயிற்சி அளித்து, மண்டல, மாவட்ட, மாநில, தேசிய அளவிளான போட்டிகளில் பங்குபெறச் செய்தல்.**

அறிவிப்பு : பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித் துறையின் கீழ் இயங்கும் சென்னைப் பள்ளிகளில், உடற்கல்வியை மேம்படுத்த தேவையான விளையாட்டு உபகரணங்கள் பள்ளிகளுக்கு வழங்கப்படும். மேலும், தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் விளையாட்டில் சிறந்து விளங்கும் மாணாக்கர்களுக்கு அவர்கள் விரும்பும் குத்துச்சண்டை, ஜூடோ, கராத்தே, சதுரங்க விளையாட்டு, Carrom, TAEKWONDO,

**ATHLETIC** போன்ற விளையாட்டுகளில் சிறப்பான பயிற்சி அளிக்க தகுதி வாய்ந்த பயிற்சியாளர்கள் தொகுப்பூதியத்தின் அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டு **2024-2025-**ஆம் கல்வியாண்டில் **6** மாதம் பயிற்சிகள் வழங்கவும், விளையாட்டு உபகரணங்கள் வழங்குவதற்க்காகவும், மேற்கூறிய போட்டிகளில் கலந்துக்கொள்ள ஏதுவாக மாணாக்கர்களை பயிற்சியாளர் அழைத்துச் சென்று வரும் செலவினங்களுக்காகவும் ரூ.**30.00** இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**15.** சென்னை பள்ளிகளில் ஆண்டு தோறும் மாணவர்களின் படைப்பாற்றல் மற்றும் பள்ளிகளின் முன்னேற்றம் ஆகியவற்றை காட்சிப்படுத்தி, பாராட்டு விழாக்கள் நடத்தப்படும்.

அறிவிப்பு: **2024-2025** ஆம் கல்வியாண்டில் சென்னை தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் கொண்டாடப்படும், பள்ளி ஆண்டு விழாக்களுக்கு, பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாண்புமிகு மேயர், மரியாதைக்குரிய துணை மேயர், மாமன்ற உறுப்பினர்கள், உயர் அலுவலர்கள் மற்றும் பள்ளியில் பயின்ற முன்னாள் மாணாக்கர்கள் ஆகியோர்கள் அழைக்கப்படுவார்கள். இவ்விழாக்களில் மாணவர்களின் படைப்பாற்றல் மற்றும் பள்ளிகளின் முன்னேற்றம் ஆகியவற்றை காட்சிப்படுத்தி பாராட்டிடவும், மாணாக்கர்களின் வளர்ச்சி மற்றும் வழிகாட்டும் விதமாக பள்ளி ஆண்டு விழா விமரிசையாக கொண்டாட **419** சென்னை பள்ளிகளுக்கு ரூ.**28.50** இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**16.** பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித்துறையின் கீழ் தற்போது **Gender Club** செயல்பட்டு வரும் **92** நடுநிலை, **38** உயர்நிலை, **32** மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு புதிய விளையாட்டு அறிமுகப்படுத்தப்படும்.

அறிவிப்பு: பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் கீழ் தற்போது **Gender Club** செயல்பட்டு வரும் **92** நடுநிலை, **38** உயர்நிலை, **32** மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு கற்றலை எழுத்து வடிவமாக நோக்கும் வகையில் சிந்தனை சிறக்க "தடையை உடை" என்னும் விளையாட்டு அறிமுகப்படுத்தப்பட்டு அதற்குரிய புத்தகங்கள் கொள்முதல் செய்து வழங்குவதற்காகவும் மற்றும் அதற்கான பயிற்சிக்காகவும் ரூ.**22.35** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**17.** சென்னை தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் பயின்று வரும் **75,793** மாணாக்கர்கள் தமிழ் மற்றும் ஆங்கில பாடத்தின் வாசிப்பு திறன் மற்றும் எழுத்துத்திறனை மேம்படுத்தவும் மற்றும் அடிப்படை கணிதத் திறன்களை வளர்க்க ஏதுவாக ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்தல்.

அறிவிப்பு : பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து மண்டலங்களிலும் உள்ள **208** தொடக்கப்பள்ளிகளில் பயிலும் **43,001** மாணாக்கர்கள் மற்றும் **130** நடுநிலைப்பள்ளிகளில் பயிலும் **32,792** மாணாக்கர்கள் பயன் பெறும் வகையில், அவர்கள் தம் வாசிப்பு மற்றும் எழுத்துத்திறன்களை மேம்படுத்த, மொழிப் பாடங்களாகிய தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் திறன்களை வளர்க்கவும் மற்றும் கணிதப்பாடத்தில் அடிப்படைக் கணிதத்திறன்களை வளர்த்துக் கொள்ளும் வகையில் அப்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு சிறப்பு பயிற்சி அளித்து, அப்பயிற்சியின் வாயிலாக பள்ளி ஆசிரியர்கள், அவர்தம் திறன்களை வளர்த்துக்கொள்ள ஏதுவாகவும், அப்பயிற்சியின் மூலம் ஆசிரியர்கள் பெற்ற கற்றலின் அடிப்படையில், மாணாக்கர்களுக்கு போதிக்க ஏதுவாக ஆசிரியர்களுக்கு கையேட்டுடன் கூடிய பயிற்சிகள் ரூ.**15.00** லட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**18.** **சென்னை தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளில், முதற்கட்டமாக 140 பள்ளிகளில் பயிலும் மழலையர் (LKG, UKG) மாணாக்கர்களுக்கு தமிழ், ஆங்கிலம் மற்றும் கணித பாடங்களை எளிதாகவும், மகிழ்வுடனும் கற்க ஏதுவாக கற்றல் உபகரணங்கள் வழங்குதல்.**

அறிவிப்பு : பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட தொடக்கப்பள்ளிகளில் **2024-2025-**ஆம் கல்வியாண்டில் மாணாக்கர்களின் எண்ணிக்கையின் விகிதாச்சாரத்திற்கு ஏற்ப முதற்கட்டமாக **70** தொடக்கப்பள்ளிகளிலும், **70** நடுநிலைப் பள்ளிகளிலும் பயின்று வரும் மழலையர் வகுப்பு **(LKG, UKG)** மாணாக்கர்களுக்கு, தமிழ், ஆங்கிலம் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களை எளிதாகவும், மகிழ்வுடனும், உற்சாகமுடனும் கற்க ஏதுவாக அம்மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் ரூ.**14.00** லட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**19.** **சென்னை உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளுக்கு இசைக்குழுவினை அமைக்க ஏதுவாக இசைக்கருவிகள் வழங்குதல்.**

அறிவிப்பு : **2024-2025-**ஆம் கல்வியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் கீழ் இயங்கும் **46** உயர்நிலைப் பள்ளிகளில் முதல் கட்டமாக **5** உயர்நிலைப்பள்ளிகளிலும் **35** மேல்நிலைப்பள்ளிகளில் **6** மேல்நிலைப்பள்ளிகளிலும் பள்ளி வேலை நாட்களில் நடைபெறவுள்ள காலை வழிபாட்டுக் கூட்டம் மற்றும் கலை நிகழ்ச்சியின் போது பள்ளி மாணாக்கர்கள் இசைக்கக் கூடிய வகையில் இசைக்கருவிகள் வழங்க **11** பள்ளிகளுக்கு தலா ரூ.**1.00** இலட்சம் வீதம் ரூ.**11.00** இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**20.** **சென்னை உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் 10 ஆம் வகுப்பு பயின்று வரும் மாணாக்கர்கள் 2023-2024-ஆம் கல்வியாண்டின் அரசு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள்**

பெற்று மீண்டும் சென்னைப் பள்ளிகளிலேயே தொடர்ந்து 11-ஆம் வகுப்பில் சேர்ந்து பயிலும் 50 மாணாக்கர்களை, இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (ISRO) மற்றும் பாபா அணு ஆராய்ச்சி மையம் (BARC) போன்ற இடங்களுக்கு சுற்றுலா அழைத்துச் செல்லுதல்.

சென்னை உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் 10-ஆம் வகுப்பு மாணாக்கர்கள் அரசுப் பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்று, தொடர்ந்து 11-ஆம் வகுப்பு மேல்நிலைக் கல்வியை சென்னைப் பள்ளிகளிலேயே தொடரும் 50 மாணாக்கர்களை கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்வது வழக்கம். 2022-2023-ஆம் கல்வியாண்டில் தலைநகரான டெல்லிக்கு மாணாக்கர்களை சுற்றுலா அழைத்துச் சென்று வந்ததை போன்று 2023-24ஆம் கல்வியாண்டில் பயின்று வரும் 10 ஆம் வகுப்பு மாணாக்கர்களை மேற்கூறியவாறு 11ஆம் வகுப்பில் சேரும் மாணாக்கர்களில் 50 மாணாக்கர்களை ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (ISRO), மும்பை பாபா அணு ஆராய்ச்சி மையம் (BARC) மற்றும் கூடங்குளம் அணு மின் நிலையம் போன்ற இடங்களுக்கு சுற்றுலா அழைத்துச் செல்ல ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**21.** பெருநகர சென்னை மாநகராட்சியில் விரிவாக்கம் செய்யப்பட்ட 8 உயர்நிலை மற்றும் 3 மேல்நிலைப்பள்ளி என மொத்தம் 11 பள்ளிகளுக்கு நகல் எடுக்கும் வசதியுடன் கூடிய பிரிண்டர்கள் வழங்குதல்.

அறிவிப்பு : 2024 -2025 ஆம் கல்வியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சியில் விரிவாக்கம் செய்யப்பட்ட பள்ளிகளை மேம்படுத்துவதற்கு முக்கியத்துவம் கொடுத்து 8 உயர்நிலை மற்றும் 3 மேல்நிலைப்பள்ளி என மொத்தம் 11 பள்ளிகளுக்கு நகல் எடுக்கும் வசதியுடன் கூடிய பிரிண்டர்கள் தலா ஒன்று வீதம் 11 பிரிண்டர்கள் ரூ.5.50 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**22.** **சென்னை தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் மாமன்ற உறுப்பினர்களைத் தலைவராகக் கொண்டு “குழந்தைகள் பாதுகாப்பு குழு” அமைத்தல்.**

அறிவிப்பு : **2024-2025** ஆம் கல்வியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சியின் சென்னை தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்கள் தங்களை பாதுகாத்துக் கொள்ளவும், எதிர்வரும் உடல் மற்றும் மன ரீதியான பிரச்சனைகளைத் தவிர்க்கவும், பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களை தலைவர்களாக கொண்ட “குழந்தைகள் பாதுகாப்பு குழுக்கள்” அனைத்து சென்னை தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் ஏற்படுத்தப்படும்.

**23.** **சென்னை தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 1,20,175 மாணாக்கர்களின், சமூக நலனில் அவர்தம் பங்களிப்பினை ஊக்குவிக்கும் வகையில் குப்பைகளை மக்கும் மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து முறையாக அகற்றும் விழிப்புணர்வை வாரந்தோறும் பள்ளிகளிலேயே ஆசிரியர்கள் மூலம் கற்றுத் தருதல்.**

அறிவிப்பு : சென்னை தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களின் சமூக நலன் கருதி அவர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்கள் பயன்படுத்தும் பொருட்களின் கழிவுகளை பள்ளி வளாகத்தில் குப்பை கொட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட பகுதியில் அல்லது தொட்டியில் மக்கும் மற்றும் மக்காத குப்பைகளாக தரம் பிரித்தளிக்கும் செயல்பாட்டை ஆசிரியர்கள் அறிவுறுத்த வேண்டும். இதனை **1** முதல் **12** -ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு ஒவ்வொரு வாரமும் புதன் கிழமை அன்று மதிய உணவு இடைவேளை முடிந்து தொடங்கும் முதல் பாட வேளையில் **15** நிமிடங்கள் காகித குப்பைகள், நெகிழிகள்

**(Plastics)** மற்றும் உணவுக் கழிவுகளை முறையாக பிரித்து அவற்றை மறுசுழற்சி மூலம் எவ்வாறு பயன்படுத்துவது என்பது தொடர்பான விழிப்புணர்வு வகுப்புகளை நடத்த அந்தந்த பள்ளி தலைமையாசிரியர்களால் ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தப்படும். இவ்விழிப்புணர்வினால் மாணாக்கர்களுக்கு சமூகத்தில் சமூக நலன் குறித்த அக்கறையில் கூடுதல் கவனம் ஏற்படுத்த வாய்ப்பாக அமையும்.

**24.** **2024-2025** ஆம் கல்வியாண்டில் சென்னைப் பள்ளிகளில் பயின்று வரும் மாணாக்கர்களிடையே வாசிப்புப் பழக்கத்தைச் சிறந்த முறையில் வழிநடத்தும் நோக்கோடு இயங்கி வரும் நூலகத்தைக் கொண்டுள்ள பள்ளிகளுக்கு பாராட்டுச்சான்றிதழ் வழங்குவது.

அறிவிப்பு : **2024-2025-**ஆம் கல்வியாண்டில் சென்னைப்பள்ளிகளில் பயின்று வரும் மாணவ மாணவர்களிடையே கற்பனைத்திறன், படைப்பாற்றல், வாசிப்புத்திறன் ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்கத்துடன் பள்ளி நூலகங்கள் இயக்கி வரும் பள்ளிகளுக்கு "நல்நூலகப்பள்ளி" என்ற பாராட்டுச்சான்றிதழ் வழங்கப்படும்.

**25.** பெருநகர சென்னை மாநகராட்சியில் விரிவாக்கம் செய்யப்பட்ட சென்னைப் பள்ளிகளில் பாலின குழுக்கள் **(Gender Club)** செயல்பாடுகள் –அறிமுகப்படுத்துதல்.

அறிவிப்பு : பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் உள்ள நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் **8** ம் வகுப்பு மற்றும் **9** ம் வகுப்புகளில் பயின்று வரும் மாணாக்கர்களிடையே பயிற்சி பெற்ற ஆசிரியர்களால் கடந்த ஆண்டு பாலின குழுக்கள் அமைக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தினை விரிவாக்கம் செய்யப்பட்ட மண்டலங்களான **1,2,3,7,11,12,14** மற்றும் **15-**லிருந்து இணைக்கப்பட்ட நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் **2024-2025-**ஆம் கல்வியாண்டில்

**8-ஆம் வகுப்பு மற்றும் 9-ஆம் வகுப்புகளில் பயின்று வரும் மாணாக்கர்களிடையே பாலின குழுக்களை ஏற்படுத்த அப்பகுதிகளைச் சார்ந்த 49 பள்ளி ஆசிரியர்களுக்கு Gender Club மூலம் பயிற்சி வழங்கப்படும்.**

**26. 2024-2025-ஆம் கல்வியாண்டில் சென்னைப் பள்ளிகளில் மாணவர்கள் வருகையை 95 விழுக்காட்டிற்கு மேல் உயர்த்திட உழைக்கும் பள்ளிகளுக்கு பாராட்டுச்சான்றிதழ் வழங்கப்படுவது.**

அறிவிப்பு : **2024-2025-**ஆம் கல்வியாண்டில் சென்னைப் பள்ளிகளில் **1,20,175** மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றனர். அவர்களின் இடைநிற்றலை முற்றிலும் தவிர்க்கும் நோக்கோடு அனைத்து மாணவர்களின் வருகையில் கவனம் செலுத்தி மாணாக்கர்களின் வருகையை **(EMIS) 95** விழுக்காட்டிற்கு மேல் உயர்த்திட உழைக்கும் பள்ளிகளுக்கு **“Excellent school”** என்ற பாராட்டுச்சான்றிதழ் வழங்கப்படும்.

**27.** சென்னைப் பள்ளிகளில் மழலையர் வகுப்பில் இரண்டாம் ஆண்டு **(UKG)** பயின்று வரும் **5944** மாணவ, மாணவியர்களுக்கு மழலையர் வகுப்பை நிறைவு செய்ததற்கான பட்டமளிப்பு விழா நடத்தப்படும்.

அறிவிப்பு : சென்னைப் பள்ளிகளில் மழலையர் வகுப்பில் இரண்டாம் ஆண்டு **(UKG)** பயின்று மழலையர் படிப்பை நிறைவு செய்யும் **5944** மாணவ, மாணவியர்களுக்கும், கற்றலைச் சிறப்பாக நிறைவு செய்தமையைப் பாராட்டியும் ஒன்றாம் வகுப்பில் சேருவதற்கான முழு தகுதியைப் பெற்றமையை பாராட்டியும் அவர்களை ஊக்கப்படுத்தும் விதமாக ரூ.**30.00** இலட்சம் மதிப்பீட்டில் விழா நடத்தி, மாணவ மாணவியர்களுக்கு “பட்டம்” சான்று வழங்கப்படும்.

# பொது சுகாதாரம்

**28. கத்திவாக்கம் நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையத்தை (UPHC) 10 படுக்கைகளுடன் மேம்படுத்துதல்.**

பெரியகுப்பம், சின்னக்குப்பம், நெட்டுக்குப்பம் மற்றும் எண்ணூர் முகத்துவாரம் ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்கள் தங்களுக்கு உயர் சிகிச்சை வசதிகள் வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். சென்னை, எண்ணூர் முகத்துவாரப் பகுதியிலிருந்து சுமார் 4 கி.மீ தொலைவில் உள்ள திருவொற்றியூரில் 50 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனையும், 100 படுக்கைகள் கொண்ட நகர்ப்புர சமுதாய நல மருத்துவமனையும் உள்ளது. கத்திவாக்கம் பகுதியில் வசிக்கும் மக்களுக்கும் உயர்தர மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட வேண்டியது அவசியமாகிறது.

**அறிவிப்பு : கத்திவாக்கம் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு மேம்பட்ட உயர்தர மருத்துவ சிகிச்சை அளிக்க, கத்திவாக்கம் நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையம் (UPHC) 10 படுக்கைகளுடன் மேம்படுத்தப்படும். மேலும், சுவாசம், தோல், காது, மூக்கு மற்றும் தொண்டை நோய்கள் போன்றவற்றால் பாதிக்கப்படும் நோயாளிகளுக்கு வாரம் ஒருமுறை, சிறப்பு மருத்துவர்களை கொண்டு சிகிச்சை அளிக்கப்படும். இதற்கு ரூ.3.00 கோடி செலவீனம் மேற்கொள்ளப்படும்.**

**29. 113 நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு (UPHC) ஜெனரேட்டர் வசதிகளை வழங்குதல்.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் இருக்கும் 140 நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் (UPHC), தாய் சேய் நல சேவைகள் தொற்று மற்றும் தொற்றா நோய்களுக்கான சிகிச்சை வசதிகள், தடுப்பூசி சேவைகள், அவசரக்கால சேவைகள் மற்றும் ஆய்வக சேவைகள் அளிக்கப்படுகின்றன. இச்சேவைகள்

தங்குதடையின்றி வழங்க தடையற்ற மின்சாரம் வழங்கப்பட வேண்டும். மேலும், தேசிய தர சான்று நிர்ணய அலகீட்டிற்கு தடையற்ற மின்சாரம் இருப்பது அவசியமானதாகும்.

**அறிவிப்பு : முதற்கட்டமாக 113 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ரூ.5.09 கோடி மதிப்பீட்டில் ஜெனரேட்டர் கொள்முதல் செய்து வழங்கப்படும்.**

**30. மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த சுகாதார பணியாளர்களுக்கு மருத்துவம் சார்ந்த பயிற்சிகள் அளிப்பதற்காக மடி கணினியுடன் கூடிய LCD Projector வழங்குவது.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள நகர்ப்புர சமுதாய நல மையங்கள் (UCHC), நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்கள் (UPHC) மற்றும் சுகாதார / நல வாழ்வு மையங்களில் பணிபுரியும் மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த சுகாதார பணியாளர்களுக்கு குறிப்பிட்ட கால இடைவெளியில் தாய் சேய் நலம், தொற்று மற்றும் தொற்றா நோய்களுக்கான சிகிச்சை மற்றும் ஆய்வக நடைமுறைகள் போன்ற பணிகளுக்கு பயிற்சி அளிக்க வேண்டியுள்ளது. பயிற்சி அளிக்க வேண்டிய பணியாளர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதால், இப்பயிற்சியை மண்டல அளவிலேயே அளிக்கலாம்.

**அறிவிப்பு : பெருநகர சென்னை மாநகராட்சி, சுகாதாரத் துறையின் கீழ் வரும் நகர்ப்புர சமுதாய நல மையங்கள் (UCHC), மாநகர ஆரம்ப சுகாதார நிலையங்கள் (UPHC) மற்றும் சுகாதார & நல வாழ்வு மையங்களில் பணிபுரியும் மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த சுகாதார பணியாளர்களுக்கு, மருத்துவம் சார்ந்த பயிற்சி அளிக்க 15 மருத்துவ மண்டலங்களுக்கும் ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் மடி கணினியுடன் கூடிய LCD Projector கொள்முதல் செய்து வழங்கப்படும்.**

**31. அனைத்து நகர்ப்புர சுகாதாரம் மற்றும் நலவாழ்வு மையங்களில் (UHWCs) மின் தடை ஏற்படாமல் இருக்க, மின் இன்வெர்ட்டர்கள் அமைத்தல்.**

பெருநகர சென்னை மாநகராட்சியில், நகர்ப்புர சுகாதாரம் மற்றும் நலவாழ்வு மையங்கள் (UHWCs) காலை 8 மணி முதல் மதியம் 12 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரையிலும் செயல்படுகின்றன. இம்மையங்களில் மின்சாரம் தடை ஏற்பட்டாலும், தடையற்ற மருத்துவ சேவைகள் வழங்கவும் சிகிச்சைக்கு வருபவர்கள் / பணியாளர்களின் பாதுகாப்பு கருதியும், இன்வெர்ட்டர் பொருத்தி தடையற்ற மின்வசதி செய்து வழங்குவது அவசியமாகும்.

**அறிவிப்பு : 140 நகர்ப்புர சுகாதாரம் மற்றும் நல வாழ்வு மையங்களில், மின் தடை ஏற்படும் போது, தடையின்றி மருத்துவ சேவைகள் வழங்கும் வகையிலும், சிகிச்சை பெறுபவர்கள் / பணியாளர்களின் பாதுகாப்பு கருதியும், மின் இன்வெர்ட்டர்கள் ரூ.4.20 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்து அமைக்கப்படும்.**

**32. பெருநகர சென்னை மாநகராட்சி சாலைகளில் சுற்றித்திரியும் கால்நடைகளை கட்டுப்படுத்த கால்நடைகளை பிடிக்கும் பணிக்காக கூடுதலாக தற்காலிக தொழிலாளர்களை நியமிப்பது.**

பெருநகர சென்னை மாநகராட்சி சாலைகளில் கால்நடைகள் சுற்றித்திரிவதால், போக்குவரத்து நெரிசல் மற்றும் சில நேரங்களில் மனித உயிர் இழப்பு போன்ற நிகழ்வுகள் ஏற்படுவதை கட்டுப்படுத்த, தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். தற்போது, 5,6,8,9,10 மற்றும் 13 மண்டலங்களில் கால்நடைகளை பிடிப்பதற்காக தலா ஒரு மண்டலத்திற்கு 5 தற்காலிக தொழிலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும், இந்நடவடிக்கைகளை தீவிரப்படுத்த கூடுதலாக கால்நடை பிடிக்கும் பணிக்கு தற்காலிக பணியாளர்களை ஈடுபடுத்தி, மாடுகள் நகரில் சுற்றித் திரிவதை கட்டுப்படுத்த வேண்டியது அவசியமாகிறது.

**அறிவிப்பு : சாலைகளில் சுற்றித்திரியும் கால்நடைகளை கட்டுப்படுத்த கால்நடைகளை பிடிக்கும் பணிக்காக 1,2,3,4,7, 11,12,14 மற்றும் 15 ஆகிய 9 மண்டலங்களுக்கு, தலா 5 நபர் வீதம் 45 தற்காலிக பணியாளர்கள், சுய உதவி குழுக்கள் மூலம் நியமிக்கப்படுவார்கள். இதற்காக வருடத்திற்கு ரூ.1.16 கோடி தொடர் செலவினமாக இருக்கும்.**

**33. பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவ அலுவலர்களுக்கு மருத்துவக் கல்வி (CME) பயிற்சி வழங்குவது.**

பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவ அலுவலர்களுக்கு நோய் மேலாண்மையை மேம்படுத்தவும், தேசிய நல திட்டங்களின் சமீபத்திய மாற்றங்கள் மற்றும் வழிகாட்டுதல் குறித்த விவரங்களை அறிந்து கொள்ளவும், மாநகராட்சி அளவில் பயிற்சி அளிக்க வேண்டியது அவசியமாகும்.

**அறிவிப்பு : பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவ அலுவலர்களுக்கு நோய் மேலாண்மை மற்றும் தேசிய நலத் திட்டங்களின் சமீபத்திய மாற்றங்கள் மற்றும் வழிகாட்டுதல் குறித்து மருத்துவ அலுவலர்களுக்கு மூன்று மாதத்திற்கு ஒரு முறை தொடர் மருத்துவ கல்வி (Continuing Medical Education) குறித்த பயிற்சி தொடர்ச்சியாக வழங்கப்படும். இப்பயிற்சிக்கு ரூ.2.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

**34. மண்டலம்-10குட்பட்ட பகுதியில். துணை மருந்து பண்டக சாலை அமைக்கப்படும்.**

பெருநகர சென்னை மாநகராட்சியின் மருத்துவமனைகளுக்கு, சென்னை, சிந்தாதரிப்பேட்டை, மத்திய மருந்து பண்டக சாலையிலிருந்து மருந்துப் பொருட்கள், ஆய்வக உபகரணங்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த உபகரணங்கள் அனைத்தும் வழங்கப்பட்டு வருகிறது. இப்பண்டக சாலை சென்னையின்

வடக்கு பகுதியில் அமைந்திருப்பதால், மற்ற பகுதிகளில் உள்ள மருத்துவமனைகளுக்கு மருந்துப் பொருட்கள் எடுத்துச் செல்ல பயண நேரமும், மிகையான வாகன வாடகையும் ஆகின்ற காரணத்தால், மற்றுமொரு துணை மருந்து பண்டக சாலை அமைப்பது அவசியமாகிறது.

**அறிவிப்பு : மண்டலம்-10, கோட்டம்-139, எண் : 5, ராகவாரெட்டி காலனி, 2வது இணைப்புத் தெரு, ஜாபர்கான் பேட்டை, சென்னை-83ல் துணை மருந்து பண்டக சாலை சோதனை முறையில் அமைக்கப்படும். இதற்கு ரூ.2.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

**35. 7 நாய் பிடிக்கும் வாகனங்கள் கொள்முதல் செய்தல்.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் தற்போது 16 நாய் பிடிக்கும் வாகனங்கள் உள்ளது. 2023-2024ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 6 புதிய நாய் பிடிக்கும் வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே, உபயோகத்தில் உள்ள நாய் பிடிக்கும் வாகனங்கள் அடிக்கடி பழுதடைவதால் 7 புதிய நாய் பிடிக்கும் வாகனங்கள் வாங்குவது அவசியமாகிறது.

**அறிவிப்பு : பெருநகர சென்னை மாநகர எல்லைக்குள் சுற்றித் திரியும் தெரு நாய்கள், பொது மக்களை அச்சுறுத்துவது மற்றும் கடிப்பதால் ரேபிஸ் நோய் தாக்கம் ஏற்பட்டு உயிரிழப்பு ஏற்படவும் வாய்ப்புள்ளது, எனவே, தெரு நாய்களின் பெருக்கத்தை கட்டுப்படுத்த, புதியதாக 7 நாய் பிடிக்கும் வாகனம் கூடுதலாக கொள்முதல் செய்து பிடிக்கப்படும் நாய்களுக்கு கருத்தடை சிகிச்சை செய்வதன் மூலம் நாய் இனப்பெருக்கம் கட்டுப்படுத்தப்பட்டு பொது மக்களின் நலன் காக்கப்படும். இத்திட்டத்திற்காக ரூ.70.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

**36. நடமாடும் கால்நடை தடுப்பூசி மருந்து செலுத்தும் வாகனங்கள் (Mobile Veterinary Vaccination Vehicles) கொள்முதல் செய்தல்.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் சுற்றித் திரியும் தெரு நாய்களுக்கு ஏற்படும் வெறி நாய் கடி நோய் பாதிப்பிலிருந்து, அதன் மூலம் பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படா வண்ணம் தடுக்க, முதன் முறையாக தெருநாய்களுக்கு அவற்றின் இருப்பிடத்திற்கே சென்று வெறி நாய் கடி நோய் தடுப்பூசி செலுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக நடமாடும் கால்நடை தடுப்பூசி மருந்து செலுத்தும் வாகனங்கள் (Mobile Veterinary Vaccination Vehicles) கொள்முதல் செய்ய வேண்டியுள்ளது.

**அறிவிப்பு : பெருநகர சென்னை மாநகராட்சியில் சுற்றித் திரியும் தெரு நாய்களுக்கு ஏற்படும் வெறி நாய் கடி நோய் பாதிப்பிலிருந்தும், அதன் மூலம் பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படா வண்ணம் தடுக்கவும் வடக்கு, மத்தியம் மற்றும் தெற்கு ஆகிய வட்டாரங்களுக்கு தலா ஒன்று வீதம் மூன்று நடமாடும் கால்நடை தடுப்பூசி மருந்து செலுத்தும் வாகனங்கள் (Mobile Veterinary Vaccination Vehicles) ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.**

**37. ANM மாணவிகளுக்கு புதிய விடுதி கட்டடம் கட்ட அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி பொதுசுகாதாரத்துறை தொற்று நோய் மருத்துவமனையில் இரண்டாண்டு (ANM Course) பயிற்சி நடத்தப்பட்டு வருகிறது. மாணவிகள், தொற்றுநோய் மருத்துவ மனையிலேயே தங்கி பயில, விடுதி வசதி செய்யப்பட்டுள்ளது. புதிய கட்டடம் எதுவும் இல்லாததால் பழைய வார்டினை விடுதியாக மாற்றி மாணவர்கள் அதில் தங்கி, பயின்று வருகிறார்கள். இது மிகவும் பழைய கட்டடம் என்பதால் மாணவிகள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகிறார்கள். இந்த விடுதிக்கு அருகில் உள்ள காலி இடத்தில் மாணவிகளுக்கு புதிதாக விடுதி அமைத்து தருவது அவசியமாகிறது.

**அறிவிப்பு : பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை தொற்று நோய் மருத்துவமனையில் ANM மாணவிகளுக்காக புதிய விடுதிக்கான கட்டடம் ரூ.3.00 கோடி செலவில் கட்டப்படும்.**

**38. மாட்டுத்தொழுவங்களுக்கு உரிமம் வழங்குதல்.**

தற்போது பெருநகர சென்னை மாநகராட்சியில் சுற்றித்திரியும் மாடுகள் பிடிக்கப்பட்டு, மாநகராட்சி மாட்டுத் தொழுவங்களில் அடைக்கப்பட்டு அபராதம் வசூலிக்கப்பட்டு வருகிறது. மேலும், பொது மக்களுக்கு மாடுகளால் ஏற்படும் இடையூறுகளை களைவதற்காக மாட்டின் உரிமையாளர்களால் வளர்க்கப்படும் மாடுகளை முறைப்படுத்தப்பட வேண்டியுள்ளது.

**அறிவிப்பு : பெருநகர சென்னை மாநகராட்சியில் வளர்க்கப்படும் மாடுகளை முறைப்படுத்த போதிய இடவசதி மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளைக் கொண்டுள்ள மாட்டு உரிமையாளர்களின் மாட்டுத் தொழுவங்களுக்கு உரிமம் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.**

**39. புதியதாக 2 நாய் இனக்கட்டுப்பாடு மையங்கள் நிறுவப்படுதல்.**

தற்போது, பெருநகர சென்னை மாநகராட்சியில், தெருநாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த புளியந்தோப்பு, லாயிட்ஸ் காலனி, கண்ணம்மாப்பேட்டை, மீனம்பாக்கம் மற்றும் சோழிங்கநல்லூர் ஆகிய இடங்களில் நாய் இனக்கட்டுப்பாடு மையங்கள் இயங்கி வருகின்றன. கடந்த 2023ஆம் ஆண்டு 19,640 தெரு நாய்கள் பிடிக்கப்பட்டு 14,855 தெரு நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

**அறிவிப்பு : பெருநகர சென்னை மாநகராட்சியில், தெருநாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த, கூடுதலாக இரண்டு நாய் இனக்கட்டுப்பாட்டு மையங்கள் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் துவக்கப்படும்.**

**40. கொசுப்புழு நாசினி தெளிக்கும் பணிக்கு Vehicle Mounted Power Sprayer-வுடன் கூடிய துணை கருவிகள் (Accessories) கொள்முதல் செய்வது.**

பெருநகர சென்னை மாநகராட்சியிலுள்ள 31 குறுகிய கால்வாய்களில் உருவாகும் கொசுப்புழுகளை அழிப்பதற்கு கொசுப்புழு நாசினி தெளிக்கும் பணிக்கு ஒவ்வொரு மண்டலத்திற்க்கும் ஒரு Vehicle Mounted Power Sprayer-வுடன் கூடிய துணை கருவிகள் (Accessories) கொள்முதல் செய்வது அவசியமாகிறது.

**அறிவிப்பு : கால்வாய்களில் உருவாகும் கொசுப்புழுகளை அழிப்பதற்கு கொசுப்புழு நாசினி தெளிக்கும் பணிக்கு ரூ.80,000/- வீதம் 15 மண்டலங்களுக்கு ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒரு Vehicle Mounted Power Sprayer-வுடன் கூடிய துணை கருவிகள் (Accessories) கொள்முதல் செய்து வழங்கப்படும்.**

**41. நோய் பரப்பும் கொசுக்களுக்கான மருந்தின் எதிர்ப்பு சக்தியை கண்டறிய Vector Control Monitoring Lab அமைத்தல்.**

கொசுக்களை அழிக்கும் மருந்துகளின் எதிர்ப்பு சக்தியை கண்டறிய பூச்சி தடுப்பு செயல்முறை ஆய்வுக் கூடம் அமைத்து மருந்துகளின் தரத்தை உயர்த்துவது குறித்து ஆய்வு செய்யப்பட வேண்டியது அவசியமாகிறது.

**அறிவிப்பு : சுகாதாரம், பூச்சி தடுப்பு, மலேரியா, டெங்கு, சிக்கன் குனியா, போன்ற நோய் தாக்குதலை தடுப்பதற்கும், கொசுக்கள் மற்றும் நோய் பரப்பும் பூச்சிகளின் பெருக்கத்தை குறைக்கவும் / நோய்கள் பரவாமல் தடுப்பதற்கும் / கொசுக்களிடம் கொசுக்கொல்லி மற்றும் புகைப்பரப்பும் மருந்துகளின் எதிர்ப்பு சக்தியை கண்டறிவதற்கு செயல்முறை ஆய்வு கூடம் அமைக்கப்படும்.**

**42. அடையாறு நகர்ப்புற சமூக சுகாதார மையம் - 70 படுக்கைகளுடன் மேம்படுத்த கூடுதல் கட்டடம் கட்டப்படும்.**

அடையாறு நகர்ப்புற சமூக சுகாதார மையம் சுமார் 5,70,077மக்கள் தொகைக்கு மருத்துவ சேவைகள் வழங்கி வருகிறது. இம்மையத்தில், மகப்பேறு/ கருத்தடை அறுவை சிகிச்சை அரங்கம், புதிதாகப் பிறந்த குழந்தைக்கு, அலகு வெப்பமூட்டும் கருவிகள் மற்றும் ஒளிக்கதிர் சிகிச்சை போன்ற தரமான மருத்துவ சிகிச்சைகள் அளிக்கப்படுவதால், அதிக அளவிளான பிரசவங்கள், கருத்தடை சிகிச்சைகள் மேற்கொள்வதால், உட்புற நோயாளிகளுக்கு தங்கி சிகிச்சை அளிக்க தற்போதுள்ள 30 படுக்கைகள் போதுமானதாக இல்லை, படுக்கைகளை அதிகப்படுத்துவது அவசியமாகிறது.

**அறிவிப்பு : அடையாறு நகர்ப்புர சமூக சுகாதார மையத்தில், சிறப்பான மருத்துவ சேவை அளிக்கப்படுவதால், சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில், இம்மருத்துவமைனையை, மண்டலத்திற்கு அடுத்துள்ள காலி இடத்தில் கூடுதலாக 70 படுக்கைகளுடன், மேம்பட்ட ஆபரேஷன் தியேட்டர் மற்றும் லிப்ட் வசதியுடன் மூன்று தளம் கொண்ட கட்டடம் ரூ.7.00 கோடி செலவில் கட்டப்படும்.**

**43. சைதாப்பேட்டை, அவசர சிகிச்சை மையம் 70 படுக்கைகளுடன் மேம்படுத்த கூடுதல் கட்டடம்**

சைதாப்பேட்டை அவசர சிகிச்சை மையம், பெருநகர சென்னை மாநகராட்சியின் 10-வது மண்டலத்திற்குட்பட்ட பகுதியில் உள்ளது. தற்போது சுமார் 3,53,631 நபர்களுக்கு மருத்துவ தேவைகளை பூர்த்தி செய்கிறது. மேலும், கூடுதலாக சுமார் 69,716 வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள அடித்தட்டு மக்களுக்கு, அவசர சிகிச்சை மையம் மூலம் மருத்துவ சேவைகள் வழங்கப்படுகின்றன, இம்மையத்தில், அதிகபட்ச பிரசவங்கள் மற்றும் கருத்தடைகள் செய்யப்படுகிறது. நகரின் மையப்பகுதியில் இருப்பது கூடுதல் நன்மை. குறைந்த வருமானம் மற்றும் கீழ், நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் தங்களின் மருத்துவ அவசர தேவைகளுக்காக இந்த மருத்துவமனையையே சார்ந்துள்ளனர். இது புறநகர் ரயில்கள் மற்றும் பேருந்து வசதிகளால் நன்கு இணைக்கப்பட்டுள்ளது. இந்த அவசர சிகிச்சை மையம் கோடம்பாக்கத்தின் வார்டு - 127 மற்றும் வார்டு - 142 இன் ஒரு பகுதிக்கும் சேவை வழங்குகிறது. 2021-22ல் 1,156 பிரசவங்கள் மற்றும் 506 கருத்தடைகள் செய்யப்பட்டது. 2022-23ல் 1,030 பிரசவங்கள் மற்றும் 473 கருத்தடைகள் செய்யப்பட்டுள்ளது. இதன்காரணமாக கூடுதல் கட்டடம் அவசியமாகிறது.

**அறிவிப்பு : சைதாப்பேட்டை, அவசர சிகிச்சை மையத்தை சுற்றியுள்ள பொதுமக்களுக்கு, மருத்துவ சிகிச்சை பெறுவதற்கான தேவை அதிகரித்து வருவதால், தற்போதுள்ள கட்டடம் போதுமானதாக இல்லாததால், விசாலமான ஆபரேஷன் தியேட்டர், லேபர் ரூம், பிரசவத்திற்குப் பிந்தைய வார்டு, NBSU, அவசர சிகிச்சை மையம் ஸ்டோர் அறைகள், காத்திருப்பு கூடம், விரிவான ஆய்வக வசதிகளுடன் கூடுதலாக 70 படுக்கை வசதியுடன், மூன்று தளம் கொண்ட கட்டடமாக ரூ.7.00 கோடி செலவில் கட்டப்படும்**

**44. பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அனைத்து நான்காம் நிலை தொழிளாளர்களுக்கும் முழு உடல் பரிசோதனை செய்வது.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் கடந்த 2022-2023-ஆம் நிதியாண்டின் மாண்புமிகு மேயர் அவர்களின் அறிவிப்பு எண்.22ல் அறிவித்துள்ளபடி, பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அனைத்து களப்பணியாளர்களுக்கும் மூன்று மாதத்திற்கு ஒரு முறை தொடர்ச்சியாக மருத்துவ முகாம் நடத்தி மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் விரிவாக்கப்பட்டு 2024-2025-ஆம் நிதியாண்டில் அனைத்து நான்காம் நிலை தொழிலாளர்களுக்கும் முழு உடல் பரிசோதனை Master Health check up செய்வதன் மூலம் அவர்கள் ஆரோக்கியமாகவும், சுறுசுறுப்பாக பணிபுரியவும் மற்றும் அவர்களின் குடும்பங்களை நல்ல முறையில் வழி நடத்தி செல்வதற்கு உறுதுணையாக இருக்கும்.

**அறிவிப்பு : பெருநகர சென்னை மாநகரை தூய்மையாக பராமரிக்கும் மிக முக்கிய பணிகளை மேற்கொள்ளும் தூய்மை, சுகாதாரம் மற்றும் சாலை பணியாளர்களின் உடல் நலனை பேணி காக்கும் வகையில் அனைத்து நான்காம் நிலை களப்பணியாளர்களுக்கும் அரசு மருத்துவகல்லூரி மருத்துவ மனைகள் மூலம் முழு உடல் பரிசோதனை, பெருநகர சென்னை மாநகராட்சியின் செலவில் மேற்கொள்ளப்படும். இதன் மூலம் அடிப்படை தொழிலாளர்களின் நலன் காக்கப்படும். இதற்காக ரூ.8.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

**45. சென்னை மாநகராட்சியில் தாய்மார்களுக்கான மகப்பேறு சிறப்பு அழைப்பு மையம் (High Risk Mother’s Call Centre) அமைத்தல்.**

மகப்பேறு இறப்பு என்பது மகளிரிடையே பெரும் சவாலாக உள்ளது. மேலும், பிரச்சனைக்குரிய மகப்பேறு என்பது தற்போது அதிகரித்து வருவதால், அதிகளவில் இறப்பு ஏற்படுகிறது. பிரச்சனைகள் வேறுபட்டு இருந்தாலும் மகப்பேறு இறப்பு என்பதை குறைக்கப்பட வேண்டிய கட்டாயத்தில் தற்போது நாம் உள்ளோம். இதை கருத்தில் கொண்டு பிரச்சனையுள்ள தாய்மார்களின் உடல் நலனை கண்காணிக்க பெருநகர சென்னை மாநகராட்சி மகப்பேறு அழைப்பு மையம் ஒன்றை நிறுவ தீர்மானித்துள்ளது.

**அறிவிப்பு : 2024-2025-ஆம் நிதியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சியில், தாய்மார்களுக்கான ஒரு மகப்பேறு சிறப்பு அழைப்பு மையம் அமைக்கப்படும். இம்மையத்தில் 5 செவிலியர்கள் பணியமர்த்தப்படுவர். இவர்கள் 15 மண்டலங்களில் இருந்து மகப்பேறு சிக்கல் உள்ள தாய்மார்களின் பட்டியலினை பெற்று வாரம் ஒருமுறை அவர்களை தொலைபேசி மூலம்அழைத்து அவர்களின் உடல் நலன் குறித்து விசாரித்து, அவர்களுக்கு மகப்பேறு சிக்கல் தொடர்பான அறிகுறிகள் ஏதேனும் இருப்பின், அவர்களுக்கு தகுந்த ஆலோசனைகளை அளிப்பர். தேவைப்படின் தாய்மார்களின் தேவைகள் மற்றும் நோய் தீவிரத்தின் தன்மையை பொறுத்து மாநகர ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் மகப்பேறு மையங்களுக்கு தெரிவித்து உடனடி சிகிச்சை அளிக்க உதவிடுவர்.**

**46. பெருநகர சென்னை மாநகராட்சியில் இளஞ்சிறார்களுக்கான ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் (Early Intervention Center) அமைத்தல்.**

குழந்தைகளின் ஒட்டுமொத்த வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும், சமூகத்தில் உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் விரிவான கவனிப்பை வழங்க, குழந்தைகள் பரிசோதிக்கப்பட்டு நோய்கள், சத்து குறைபாடு, பிறப்பில் குறைபாடுகள் மற்றும் வளர்ச்சி தாமதங்கள் உள்ள குழந்தைகள் கண்டறியப்படுகின்றனர். அவர்கள் மேல் சிகிச்சைக்காக அரசு குழந்தைகள் மருத்துவமனை, அரசு ஸ்டான்லி மருத்துவமனை, அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவமனை ஆகிய மருத்துமனைகளிலுள்ள சிறப்பு மையங்களுக்கு அனுப்பப்படுகின்றனர். வளர்ச்சி தாமதங்கள் உள்ள குழந்தைகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து தக்க சிகிச்சை அளிக்கப்பட்டால் சிகிச்சை நன்கு பயன் அளிக்கும். எனவே, இந்த வசதிகளை விரிவுப்படுத்துவது அவசியமாகிறது.

**அறிவிப்பு : குழந்தைகளின் வளர்ச்சியில் தாமதங்கள் இருக்கும் பட்சத்தில் உரிய சிகிச்சைகளை அளிக்க அனைத்து மண்டலங்களிலும் ஒரு இளஞ்சிறார்களுக்கான ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் (Early Intervention Center) அமைக்கப்படும். இம்மையங்களில் பேச்சு மற்றும் செவித்திறன் பயிற்சி போன்ற சேவைகள் அளிக்கப்படும்.**

**47. பெருநகர சென்னை மாநகராட்சியில் கூடுதல் மாட்டுத் தொழுவம் அமைத்தல்.**

தற்போது பெருநகர சென்னை மாநகராட்சியில் சுற்றித்திரியும் மாடுகள் பிடிக்கப்பட்டு புதுப்பேட்டை மற்றும் பெரம்பூரில் உள்ள மாநகராட்சி மாட்டுத் தொழுவங்களில் அடைக்கப்பட்டு அபராதம் வசூலிக்கப்பட்டு வருகிறது. இப்பணியை மேலும் தீவிரப்படுத்த தெற்கு வட்டாரத்தில் புதியதாக மாட்டுத்தொழுவம் அமைக்கப்படவுள்ளது.

**அறிவிப்பு : தென் சென்னை பகுதிகளில் சுற்றித்திரியும் மாடுகளை பிடித்து, அடைத்து அபராதம் வசூலிக்க பெருநகர சென்னை மாநகராட்சியின் தெற்கு வட்டாரத்தில் புதியதாக ஒரு மாட்டுத்தொழுவம் அமைக்கப்படும்.**

# மருத்துவ சேவைகள் துறை

**48.** **நகர சமுதாய சுகாதார நிலையங்களில் Urban Community Health Centre - (24x7) Continuous cardiotocography (CTG) உபகரணம்.**

பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவ சேவைகள் துறை கீழ் இயங்கும் 24 மணி நேர மருத்துவ மனைகளுக்கு வரும் கர்ப்பிணிகளுக்கு சிசு வளர்ச்சியை அறிய Continuous Cardiotocography (CTG) அவசியமாகுகிறது 19 மருத்துவமணைகளில் 10 மருத்துவ மனைகளில் மட்டுமே Continuous Cardiotocography (CTG) கருவி தற்போது பயன்பாட்டில் உள்ளது. அக்கருவிகள் மிகவும் பழையதான நிலையில் உள்ளதால் தற்போது மேம்படுத்தப்பட்ட continuous Cardiotocography CTG கருவிகள் 19 மருத்துவ மனைகளில் அமைக்க வேண்டியது அவசியமானது.

**அறிவிப்பு : பெருநகர சென்னை மாநகராட்சி பதினாறு Urban Community Health Centre UCHC மற்றும் மூன்று 24 மணி நேர மகப்பேறு மருத்துவமனைகளிலும் Continuous Cardiotocography CTG கருவி ஒவ்வொரு மருத்துவமனைக்கும் 2 வீதம் (19x2=38) எண்ணிக்கை மொத்த தொகை தோராயமாக ரூ.95.00 இலட்சம் மதிப்பீட்டில் TNMSC மூலமாக 2024-2025-ஆம் நிதியாண்டில் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.**

# இயந்திரப் பொறியியல் துறை

**49. பூங்கா மற்றும் சாலை நடுவன் பராமரிப்பிற்காக 6 எண்ணிக்கையில் கனரக டேங்கர் லாரிகள் கொள்முதல் செய்தல்.**

பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டின் கீழ் பராமரிக்கப்பட்டு வரும் பூங்காக்களில் உள்ள செடி கொடிகளுக்கு நீர் ஊற்றவும், சாலை மைய தடுப்பு பகுதியில் பராமரிக்கப்படும் செடிகளுக்கு நீர் ஊற்றுவதற்கு, கனரக லாரிகள் (Tanker Lorry) அவசியமாகிறது.

**அறிவிப்பு : பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டின் கீழ் பராமரிக்கப்படும் பூங்காக்கள் மற்றும் சாலை நடுவன்களில் உள்ள செடி கொடிகளுக்கு நீர் ஊற்றும் பொருட்டு கனரக வாகன அடிச்சட்டத்தின் மீது பொருத்தப்பட்ட டீசல் மூலம் இயங்கும் 6 எண்ணிக்கையில் தண்ணீர் டேங்கர் லாரிகள் (9 KL கொள்ளளவு) ரூ.1.80 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.**

**50. சென்னைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் பயன்பாட்டிற்கான பேருந்து கொள்முதல் செய்வது.**

மான்புமிகு மேயர் அவர்கள் 2023-2024ஆம் ஆண்டில், கல்வித் துறையின்கீழ் இயங்கும், சென்னைப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களை ஊக்கப்படுத்தும் விதமாக, கல்வி சுற்றுலா அழைத்து செல்வது குறித்து அறிக்கை வெளியிட்டதின்படி, தனியார் அல்லது மாநகர போக்குவரத்து கழகம் மூலம் பேருந்துகள் ஏற்பாடு செய்வதால், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஆண்டிற்கு ரூ.20.00 இலட்சம் அளவில் செலவினம் ஏற்படுகிறது. இச்செலவினத்தை குறைக்க இயந்திர பொறியியல் துறை மூலம் பள்ளிப் பேருந்துகளை கொள்முதல் செய்து வழங்கலாம்.

**அறிவிப்பு : சென்னைப் பள்ளிகளில் பயிலும் 1,20,175 மாணவ, மாணவியர்களை ஊக்கப்படுத்தும் வகையில் அவர்களை கல்வி சுற்றுலாவிற்கு அழைத்து செல்லும் பொருட்டு குறைந்தபட்சம் 45 இருக்கைகள் கொண்ட நான்கு எண்ணிக்கையிலான பள்ளி பேருந்துகள் ரூ.1.16 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்து பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.**

**51. ஹைட்ராலிக் மூலம் இயங்கும் மரம் அறுக்கும் இயந்திரம் கொள்முதல் செய்வது.**

பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் 1 முதல் 15 வரையுள்ள பகுதிகளில் வளர்ந்துள்ள மரங்கள், போக்குவரத்திற்கு இடையூறாகவும், தெருவிளக்குகளை மறைத்தும் மற்றும் பொது மக்களுக்கு இடையூறாகவும் உள்ள மரக்கிளைகளை அறுக்கவும், பேரிடர் நிகழ்வுகளால் முறிந்து விழும் மரங்களை அகற்றிடவும், தற்போது 6 எண்ணிக்கையிலான ஹைட்ராலிக் மூலம் இயங்கும் மரம் அறுக்கும் இயந்திரங்கள் பயன்பாட்டில் உள்ள நிலையில், 2023-2024-ஆம் நிதியாண்டின் அறிவிப்பின் அடிப்படையில் மூன்று இயந்திரங்கள் தற்போது கொள்முதல் செய்யப்பட்டுள்ளது, மண்டலத்திற்கு 1 வீதம் மரம் அறுக்கும் இயந்திரத்தின் தேவை அவசியம் என்பதால் கூடுதலாக 6 இயந்திரங்கள் கொள்முதல் செய்ய வேண்டியது அவசியமாகிறது.

**அறிவிப்பு : பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட, பல்வேறு பகுதிகளில் வளர்ந்துள்ள மரங்களில் உள்ள கிளைகள் நீண்டு வளர்வதால், பொது மக்களுக்கும், போக்குவரத்துக்கும் இடையூறாக உள்ள மரக்கிளைகளை அகற்றி சீரமைக்கவும் மற்றும் புயல்/மழை போன்ற பேரிடர் காலங்களில் முறிந்து விழும் மரங்களை அகற்றிடவும், கூடுதலாக 6 எண்ணிக்கையில் ஹைட்ராலிக் மூலம் இயங்கும் மரம் அறுக்கும் இயந்திரம் ரூ.1.62 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.**

**52. சாலைகளில் பழுது ஏற்பட்டு நிற்கும் மாநகராட்சி வாகனங்களை பணிமனைக்கு எடுத்து செல்ல மீட்பு வாகனம் (Recovery Vehicle) கொள்முதல் செய்தல்.**

பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் இயங்கும் இயந்திர பொறியியல் பிரிவின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வரும், வடக்கு, மத்தியம், தெற்கு மற்றும் ஆய்வு வாகன பணிமனைகளிலிருந்து வாகனங்கள் துப்புரவு, ஆய்வு மற்றும் இதர பணி மேற்கொள்வதற்காக இயக்கப்பட்டு வரப்படுகிறது. இந்த வாகனங்கள் எதிர்பாரமல் பணி மேற்கொள்ளும் பொழுது சாலைகளில் பழுது ஏற்பட்டு நிற்கும் பட்சத்தில் அவ்வாகனங்களை பணிமனைக்கு எடுத்துச் செல்வதற்காகவும் மற்றும் மாநகராட்சி பணிக்கு இடையூறாக சாலைகளில் நிறுத்திவைக்கப்படும் வாகனங்களை உடனுக்குடன் அகற்றிடவும் (Recovery Vehicle) மீட்பு வாகனத்தின் தேவை அவசியமாகிறது.

**அறிவிப்பு : இயந்திர பொறியியல் துறை மூலம் இயங்கும் வாகனங்கள் சாலைகளில் எதிர்பாராமல் பழுது ஏற்பட்டு நின்றுவிடும் நிலையில் அவ்வாகனங்களை மீட்டு பணிமனைக்கு எடுத்துச் செல்வதற்கும் மற்றும் சாலைகளில் போக்குவரத்துக்கு இடையூறாக நிறுத்தி வைக்கப்படும் வாகனங்களை உடனுக்குடன் அகற்றிடவும், 3 எண்ணிக்கையில் (வட்டாரத்திற்கு ஒன்று வீதம்) CNG மூலம் இயங்கும் மீட்பு வாகனம் (Recovery Vehicle) ரூ.1.07 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.**

**53. பெருநகர சென்னை மாநகராட்சி அச்சக பிரிவிற்கு இரண்டு எண்ணிக்கையில் Digital Duplicator Machine டிஜிட்டல் கொள்முதல் செய்தல்.**

பெருநகர சென்னை மாநகராட்சி அச்சகத்தில் பல்வேறு அச்சு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போதுள்ள அச்சு இயந்திரங்கள் போதுமானதாக இல்லாத காரணத்தினால், கூடுதலாக அச்சு இயந்திரங்கள் தேவையாக உள்ளது

**அறிவிப்பு : பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள அச்சக பிரிவில் விரைவாக அச்சுப்பணி மேற்கொள்ள புதியதாக இரண்டு எண்ணிக்கையில் Digital Duplicator Machine ரூ.25.00 இலட்சங்கள் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.**

**54. பெருநகர சென்னை மாநகராட்சி அச்சகத்திற்கு புதிய கட்டடம் கட்டுதல்.**

பெருநகர சென்னை மாநகராட்சி, இயந்திர பொறியியல் துறையின் கீழ் சென்னை வால்டாக்ஸ் சாலையில் செயல்படும் அச்சகத்தில், அலுவலக பணிக்கு தேவைப்படும் பதிவேடுகள், மருத்துவ படிவங்கள், நிர்வாக பிரிவிற்கு தேவைப்படும் படிவங்கள், தேர்தல் பணிக்கு தேவையான படிவங்கள் போன்ற அத்தியாவசிய அச்சுப் பணிகளை மேற்கொள்ளும், அச்சகத்தின் கட்டடமானது மிகவும் பழமையாகவும் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் இருப்பதால், இக்கட்டடத்தினை இடித்து அகற்றிவிட்டு புதியதாக கட்டடம் கட்டலாம்.

**அறிவிப்பு : பெருநகர சென்னை மாநகராட்சி, இயந்திர பொறியியல் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அச்சகத்திற்கான கட்டடம் பழுதடைந்து இடிந்துவிழும் நிலையில் உள்ளதால் இக்கட்டடத்தினை இடித்து அகற்றிவிட்டு புதிய கட்டடம் ரூ.5.50 கோடி செலவில் கட்டப்படும்.**

**55. ஆதித்தனார் சாலை ஆய்வு வாகன பணிமனைக்கு புதிய கட்டடம் கட்டுவது**

பெருநகர சென்னை மாநகராட்சி, இயந்திர பொறியியல் துறையின் கீழ் இயங்கும் ஆய்வு வாகன பணிமனை, புதுப்பேட்டை, ஆதித்தனார் சாலையில் அமைந்துள்ளன. இப்பணிமனையில் உள்ள கட்டடங்கள் மிகவும் பழமையாகவும் பழுதடைந்த நிலையிலும் இருப்பதனால் இக்கட்டடங்களை இடித்து அகற்றிவிட்டு புதியதாக கட்டடங்களை கட்டலாம்.

**அறிவிப்பு : புதுப்பேட்டை, ஆதித்தனார் சாலையில் உள்ள ஆய்வு வாகன பணிமனையில் உள்ள அலுவலக கட்டடம் மிகவும் பழுதடைந்துள்ளதால், அக்கட்டடத்தை முழுவதுமாக இடித்துவிட்டு ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டப்படும்.**

**56. இயந்திர துறை பொறியாளர்களுக்கு தொழில்நுட்பம் சார்ந்த பயிற்சி அளித்தல்.**

இயந்திர பொறியியல் துறை வாயிலாக சமீப காலங்களில் கொள்முதல் செய்யப்பட்டுள்ள வாகனங்கள்/உபகரணங்கள் சிறப்பு தொழில் நுட்பம் வாய்ந்தவை என்பதால், இவற்றினை பராமரிக்க போதிய இயந்திர பழுதாளர்கள் மற்றும் பொறியாளர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் இல்லாத காரணத்தினால், இயந்திர பொறியியல் துறையில் உள்ள பொறியாளர்கள்/ பணியாளர்களுக்கு உரிய பயிற்சி அளிப்பதன் மூலம் வாகனங்கள் மற்றும் உபகரணங்களில் ஏற்படும் சிறுசிறு பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்வதன் மூலம் பெரிய பழுதுகள் ஏற்படாமல் தவிர்க்கப்படுவதுடன், அதன் காரணமாக ஏற்படும் அதிக அளவிலான செலவினை தவிர்த்திட முடியும். மேலும், வாகனங்கள் மற்றும் உபகரணங்களை திறம்பட பராமரிக்கலாம்.

**அறிவிப்பு : இயந்திர பொறியியல் துறை வாயிலாக கொள்முதல் செய்யப்படும் வாகனங்கள்/உபகரணங்கள் சிறப்பு தொழில் நுட்பம் வாய்ந்தவையாக உள்ளதால், அவற்றை சிறந்த முறையில் பராமரிக்கவும் மற்றும் தற்போதைய வாகன மேலாண்மை மற்றும் பராமரிப்பில் புகுத்தப்பட்டுள்ள புதிய தொழில்நுட்பத்தினை அறிந்திடவும், உதவி பொறியாளர்கள், இளநிலை பொறியாளர்கள், இயந்திர பழுதாளர்கள் மற்றும் தொழில் திறனற்ற உதவியாளர்கள் ஆகியோருக்கு, வாகன தயாரிப்பாளர்கள் மூலமாக தொழில்நுட்பம் சார்ந்த பயிற்சி அளிக்கப்படும்.**

# மழைநீர் வடிகால் துறை

**57. நீர்நிலை புனரமைப்பு பணி.**

பெருநகர சென்னை மாநகரின், நிலத்தடி நீர்மட்டம் உயர்வதற்கு, நீர்நிலையின் கொள்ளளவு அதிகரித்து மழைநீரை சேகரிக்கவும் நீர்நிலை புனரமைக்கும் பணி மேற்கொள்ளப்பட வேண்டும்.

**அறிவிப்பு : 2024-25 ஆம் ஆண்டில் பெருநகர சென்னை மாநகரில் உள்ள 8 நீர்நிலைகளை ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்படும். இதனால் நீர்நிலைகளின் சேமிப்புத் திறன் அதிகரிப்பதால் நிலத்தடி நீர்மட்டமும் அதிகரிக்கும். நீர்நிலைகள் சுற்றி உள்ள இடங்களில் மழைநீர் தேங்குவது தவிர்க்கப்படும்.**

**58. Sponge park அமைக்கும் பணி**

பெருநகர சென்னை மாநகராட்சி வெள்ள தடுப்புப் பணியாக மழை காலங்களில் மழைநீர் சேகரிக்கும் குளமாகவும் சுற்றியுள்ள பகுதிகளில் மழைநீர் தேங்குவதை தவிர்க்கவும், குளங்கள் மற்றும் பூங்காக்களில் Sponge park அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**அறிவிப்பு : 2024-25 ஆம் ஆண்டில் மண்டலம் 2, மாத்தூர் எம்.எம்.டி.ஏ காலனியில் உள்ள குளத்தினை பரிச்சார்த்த முறையில் ரூ.8.00 கோடி மதிப்பீட்டில் Sponge park-ஆக வடிவமைக்கப்படும். இதனால் மழை காலங்களில் மழைநீர் சேகரிக்கும் குளமாகவும் சுற்றியுள்ள நிலத்தடி நீர்மட்டம் உயரவும், இப்பகுதிகளில் மழைநீர் தேங்குவதும் தவிர்க்கப்படும். மேலும் பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள பூங்காக்களில் Sponge park அமைக்க ஆய்வு செய்து விரிவான திட்ட அறிக்கை தயாரித்து Sponge park அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.**

## கட்டடம்

**59. பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள மயான பூமிகளை நவீன முறையில் மேம்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் 192 மயான பூமிகள் பயன்பாட்டிற்காக உள்ளது. பொதுமக்கள் தங்கள் உறவினர்களின் கடைசி ஈம காரியங்களை செய்வதற்கு சுகாதாரமான சூழ்நிலையில் மயான பூமிகள் அமைத்தல் இன்றியமையானது. ஆதலால், மண்டலம் 1 முதல் 15 வரை உள்ள மயான பூமிகளை நவீனமாக மேம்படுத்துவதற்கு பணிகள் மேற்கொள்ளப்படும்.

**அறிவிப்பு : பெருநகர சென்னை மாநகராட்சியால் 192 மயான பூமிகள் பராமரிக்கப்படுகிறது. இம்மயான பூமிகள் இயற்கை எழிலுடன் சுகாதாரமான முறையில் அடிப்படை வசதிகளுடன் மேம்படுத்துவதால், இறந்தவரின் இறுதி சடங்குகளில் கலந்துக்கொள்ளும் உற்றார் உறவினர்கள் மன அமைதியுடன் இருக்கைகளில் அமர்ந்து மன நிறைவுடன் இறுதி அஞ்சலி செலுத்தும் வகையில், மயான பூமிகள் ரூ.10.00 கோடி செலவில் நவீனப்படுத்தப்படும்.**

**60. "தமிழ் வாழ்க தமிழ் வளர்க" பெயர் பலகை அமைத்தல்.**

பெருநகர சென்னை மநாகராட்சி, ரிப்பன் கட்டடத்தில் தமிழ் வாழ்க, தமிழ் வளர்க என்ற வாசகம் அமைக்கப்பட்டுள்ளது. அதேபோல், மற்ற பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் அமைந்துள்ள அலுவலக கட்டடங்களிலும் **"தமிழ் வாழ்க, தமிழ் வளர்க"** என்ற வாசகம் அமைக்கப்பட வேண்டும்.

**அறிவிப்பு : 1 முதல் 15 மண்டல அலுவலகம் மற்றும் மூன்று வட்டார துணை ஆணையர் அலுவலகங்களில், "தமிழ் வாழ்க" "தமிழ் வளர்க" என்ற வாசகம் பொறிக்கப்பட்ட பெயர் பலகை மொத்தம் ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் அந்தந்த மண்டல அலுவலகங்கள் மூலம் அமைக்கப்படும்.**

**61. சென்னைப் பள்ளிகளில் மேல் தளங்களில் பாதிப்புகளை மறுசீரமைத்தல் பணிகள் மேற்கொள்ளப்படும்.**

2023-2024ஆம் கல்வியாண்டில் அறிவிக்கப்பட்ட அறிவிப்பு எண்.4ன்படி, ரூ.40.00 கோடி செலவில் சென்னைப் பள்ளிகளின் மேல்தளங்களில் ஏற்பட்ட பாதிப்புகளை மறுசீரமைத்தல் மற்றும் அனைத்து விதமான பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது. சீரமைக்கப்பட்ட பள்ளிகளை தவிர்த்து, மீதமுள்ள பள்ளிகளுக்கும், பராமரிப்புப்பணிகள் 2024-2025-ஆம் ஆண்டிலும் மேற்கொள்ளப்படும்.

**அறிவிப்பு : பழுது ஏற்பட்டிருக்கும், 201 சென்னை மாநகராட்சி பள்ளிகளின் கட்டடங்களின் மேற்தளங்களை முன்னுரிமையின் அடிப்படையில் Epoxy Water Proofing என்ற தொழில்நுட்பத்தின் மூலம் மறுசீரமைப்பு பணிகள் ரூ.25.00 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்படும்.**

**62. சென்னைப் பள்ளிகளில் புதிய பெயர் பலகைகள் பொருத்தப்படும்**

2023-2024 ஆம் கல்வியாண்டில் அறிவிக்கப்பட்ட அறிவிப்பு எண்.20ல் தெரிவித்தபடி, மொத்தம் 419 சென்னை மாநகரப் பள்ளிகளில் முதலாவதாக சென்னைப் பள்ளிகளின் தனித்துவம் வாய்ந்த (LOGO) 164 சின்னம் பொறிக்கப்பட்ட பெயர் பலகைகள் அமைக்கப்பட்டது. மீதமுள்ள பள்ளிகளுக்கான பெயர்ப்பலகைகள் 2024-2025-ஆம் கல்வியாண்டில் அமைக்கப்படும்.

**அறிவிப்பு : 255 சென்னை பள்ளிகளுக்கான தனித்துவம் வாய்ந்த சின்னம் அச்சிடப்பட்ட பெயர் பலகைகள் புதிதாக CITIIS Norms மூலம் அமைக்கப்படும்.**

## பாலங்கள்

**63. மண்டலம்-8, வார்டு 106, சூளைமேடு, விருகம்பாக்கம் கால்வாயின் குறுக்கே தற்போதுள்ள பழைய பாலத்தை இடித்து விட்டு புதிய பாலம் அமைத்தல்.**

விருகம்பாக்கம் கால்வாயின் குறுக்கே தற்போதுள்ள பாலம் மிகவும் வலுவிழந்துள்ளதால், இடிந்துவிழும் அபாயத்தை தவிர்க்கவும், மேலும், அப்பகுதி மக்களின் போக்குவரத்து சிரமத்தை போக்கும் வகையிலும், அப்பாலத்தினை முற்றிலுமாக இடித்துவிட்டு ரூ.2.32 கோடி மதிப்பீட்டில் புதிய பாலம் அமைக்கலாம் என உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**அறிவிப்பு : 2024-2025-ஆம் நிதியாண்டில் மண்டலம்-8 வார்டு-106 சென்னை, சூளைமேடு, இந்திரா காந்தி 2-வது தெருவில் விருகம்பாக்கம் கால்வாயின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பழைய பாலத்தை இடித்துவிட்டு ரூ.2.32 கோடி மதிப்பீட்டில் புதிய பாலம் அமைக்கப்படும்.**

**64. மண்டலம்-8 வார்டு 106, சூளைமேடு, கண்ணகி தெருவில் விருகம்பாக்கம் கால்வாயின் குறுக்கே தற்போதுள்ள பழைய பாலத்தை இடித்து விட்டு புதிய பாலம் அமைத்தல்.**

மண்டலம்-8 சென்னை, சூளைமேடு, விருகம்பாக்கம் கால்வாயின் குறுக்கே தற்போதுள்ள பாலம் மிகவும் வலுவிழந்துள்ளதால், இடிந்துவிழும் அபாயத்தை தவிர்க்கவும், மேலும், அப்பகுதி மக்களின் சிரமத்தை போக்கும் வகையிலும், இப்பாலத்தினை முற்றிலுமாக இடித்துவிட்டு புதிய பாலம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**அறிவிப்பு : 2024 2025 ஆம் நிதியாண்டில் மண்டலம்-8, வார்டு -106 சென்னை, சூளைமேடு, கண்ணகி தெருவில் விருகம்பாக்கம் கால்வாயின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பழைய பாலத்தை இடித்து விட்டு ரூ.2.25 கோடி மதிப்பீட்டில் புதிய பாலம் அமைக்கப்படும்.**

## பூங்கா

**65. புதிய விளையாட்டுதிடல் அமைத்தல் மற்றும் மேம்படுத்துதல்.**

சிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கும் பொருட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள விளையாட்டுத் திடல்களை மேம்படுத்துவது மற்றும் காலியிடத்தில் சிறிய அளவிலான புதிய விளையாட்டு திடல் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**அறிவிப்பு : சிறந்த விளையாட்டு வீரர் உருவாக வேண்டுமெனில் அவர்கள் பயிற்சி பெறுவதற்கு சிறந்த விளையாட்டுத் திடல்கள் அவசியம். இதனை கருத்தில் கொண்டு, மண்டலம் 2 ல், கோட்டம் 19-க்குட்பட்ட மாத்தூர் MMDA, 2வது பிரதான சாலையில் ஒரு Mini Stadium அமைக்கப்படும். மேலும், பல்வேறு இடங்களில் உள்ள 19 விளையாட்டுத்திடல்கள் ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.**

**66. மரக்கன்றுகள் நடுதல் மற்றும் பேணிக்காத்தல்.**

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளை, பசுமையாக வைக்கவும், கார்பன் புகை மாசுவை கட்டுப்படுத்தவும், சாலை ஓரங்கள் மற்றும் மாநராட்சிக்குட்பட்ட இடங்களில் மரங்களை நட்டு தொடர்ச்சியாக பராமரித்து பேணி காக்கப்படும்.

**அறிவிப்பு : 2024-2025-ஆம் நிதியாண்டில், சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சாலையோரங்கள், திறந்த வெளிகள், பூங்காக்கள் ஆகிய இடங்களில் 2.50 இலட்சம் மரக்கன்றுகளை தன்னார்வலர்கள் மூலம் நடப்பட்டு அவைகளை முறையாக பராமரித்து பேணி காக்கப்படும். இதனால் நகரத்தின் மாசு கட்டுப்படுத்தப்படும்.**

**67. சாலையோர பூங்காக்கள் அழகுப்படுத்தும் பணி.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில், சாலை ஓரங்களில் உள்ள காலியிடங்களில் பூங்காக்களை அமைத்து சென்னை மாநகரை அழகுபடுத்துவது.

**அறிவிப்பு : 2024-2025-ஆம் நிதியாண்டில், பக்கிங்காம் கால்வாய் (Central Buckingham Canal) ஒட்டியுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள 6 இடங்களில் சாலையோர பூங்காக்களை அழகுபடுத்தும் பணிகள் ரூ.4.33 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

**1. நாவலர் நகர்- லாக் நகர் (இரண்டு பக்கமும்), 2. வாலாஜா சாலையிலிருந்து பாரதி சாலை, 3. பாலாண்டியம்மன் கோயில் தெரு, 4. சிங்காரவேலர் பாலத்திலிருந்து- கைலாசபுரம் பாலம். 5. பக்கிங்காம் கால்வாய் தெரு முன்டகக் கண்ணியம்மன் பாலம். 6. கனால் பேங்க் ரோடு மைலாப்பூர் பாலம் மந்தைவெளி பாலம் (இரண்டு பக்கமும்).**

**68. பெண்கள் உடற்பயிற்சி கூடம் அமைத்தல்.**

பெருநகர சென்னை மாநராட்சிக்குட்பட்ட இடங்களில் ஆண்களுக்கான உடற்பயிற்சி கூடம் அமைக்கப்பட்டுள்ளது, எனினும் பெண்களின் உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் பொருட்டு, பெண்களுக்கும் தனியாக உடற்பயிற்சி கூடம் அமைக்கலாம்.

**அறிவிப்பு : பெருநகர சென்னை மாநகராட்சியில் ஆண்களுக்கான உடற்பயிற்சிக் கூடம் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. பெண்களுக்கான பிரத்தியேக உடற்பயிற்சி கூடம் ஏதும் இல்லை என்ற குறையை போக்க ஒரு வார்டுக்கு ஒன்று என்ற வீதத்தில் பெண்களுக்கான "EmpowHER உடற்பயிற்சி கூடம்" 200 வார்டுகளிலும் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

## வருவாய்

**69. பெருநகர சென்னை மாநகராட்சி வருவாய் துறையில் சொத்துவரி மதிப்பீட்டு ஆணைகள் மற்றும் தொழில் உரிமம் ஆணைகள் QR Code வசதி ஏற்படுத்துதல்.**

சொத்து உரிமையாளர்கள் மற்றும் தொழில் நிறுவனங்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு தொழில் நுட்ப வசதிகளை பெருநகர சென்னை மாநகராட்சியால் செய்து தரப்படுகிறது.

**அறிவிப்பு : பெருநகர சென்னை மாநகராட்சி வருவாய் துறையில் வழங்கப்படும் மதிப்பீட்டு ஆணைகளான புதிய மற்றும் கூடுதல் சொத்துவரி மதிப்பீடு, சொத்துவரி பெயர் மாற்றம் / திருத்தம், புதிய மற்றும் புதுப்பிக்கும் தொழில் உரிமங்கள் QR Code தொழில்நுட்பத்தில் வழங்கப்படும், இதன் வாயிலாக ஆணைகளின் உண்மைத் தன்மையை கண்டறியலாம்.**

**70. வரி மதிப்பீட்டு ஆணைகள், பெயர் மாற்றம் ஆணைகள், தொழில் உரிமங்கள் ஆகியவை இணையதளம் மூலம் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளும் வசதி.**

சொத்துவரி மதிப்பீட்டு ஆணைகள் மற்றும் பெயர் மாற்ற ஆணைகள், தொழில் உரிமங்கள் ஆகிய ஆணைகளை இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளும் வசதி ஏற்படுத்தப்படும்.

**அறிவிப்பு : சொத்து உரிமையாளர்கள் மற்றும் வணிகர்கள் தங்களுக்கு வேண்டிய சொத்துவரி மதிப்பீடுகள், பெயர் மாற்ற ஆணைகள், தொழில் உரிமங்கள்,போன்ற ஆணைகளை பெருநகர சென்னை மாநகராட்சியின் இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ள வழிவகை செய்யப்படும்.**

## திடக்கழிவு மேலாண்மை

**71. ஒரு வார்டுக்கு ஒரு தெரு என அனைத்து மண்டலங்களிலும் 100 சதவீதம் குப்பையை தரம் பிரித்து (Source Segregation) கொடுக்க பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவது தொடர்பாக.**

ஒரு வார்டுக்கு ஒரு தெரு என அனைத்து மண்டலங்களிலும் குப்பையை 100% தரம் பிரித்து கொடுக்க (Source Segregation), பொது மக்களிடையே விழிப்புணர்வு எற்படுத்துவதன் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சியை, தூய்மையான நகரமாக மாற்றுவதற்கு வழிவகை செய்யப்படும்.

**அறிவிப்பு : பெருநகர சென்னை மாநகராட்சியின் 200 வார்டுகளில், வார்டுக்கு ஒரு தெரு தேர்வு செய்யப்பட்டு அத்தெருவில் வசிக்கும் மக்கள் 100 சதவீதம் குப்பையை தரம் பிரித்து தரும் வகையில் அவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். இதனை முன் மாதிரியாக கொண்டு அனைத்து பொது மக்களும் தங்களது வீட்டிலிருந்து வெளியேற்றும் குப்பைகளை "மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை" என தரம் பிரித்து வழங்க விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.**

**72. பெருநகர சென்னை மாநகராட்சியில் இருந்து டிப்பர் வாகனங்கள் மூலம் எடுத்துச் செல்லப்படும் மரக்கழிவுகள் மற்றும் கட்டட இடிபாடு கழிவுகள் தெருவெங்கும் சிதறாமல் எடுத்துச் செல்ல நடவடிக்கை எடுத்தல்.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள அனைத்து வார்டுகளில் இருந்து மரக்கழிவுகள் மற்றும் கட்டட இடிபாடுகள் டிப்பர் வாகனங்கள் மூலம் எடுத்துச் செல்லப்படுகின்றன. அவ்வாறு

எடுத்துச் செல்லப்படும் கழிவுகள் தெருக்களில் சிதற வாய்ப்புள்ளது. இதனால் சுற்றுச்சூழல் பாதிப்பு மற்றும் பாதசாரிகளுக்கும் பொது மக்களுக்கும் இடையூறுகள் ஏற்படுகின்றன. அவற்றை தடுக்கும் பொருட்டு மரக்கழிவுகள் மற்றும் கட்டட இடிபாட்டு கழிவுகளை எடுத்துச் செல்லும் டிப்பர் லாரிகளுக்கு மீன் வலை போடப்பட்டு கழிவுகள் சிதறுவதை தடுக்கப்படும்.

**அறிவிப்பு : பெருநகர சென்னை மாநகராட்சியில் 102 எண்ணிக்கையில் டிப்பர் வாகனங்கள் உள்ளன. இவ்வாகனங்கள் அனைத்து வார்டுகளில் உள்ள மரக்கழிவுகள் மற்றும் கட்டட இடிபாடுகள் அகற்ற பயன்படுத்தப்படுகின்றன. அவ்வாகனங்கள் கொடுங்கையூர் மற்றும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகங்களுக்கு செல்லும் போது மரக்கழிவுகள் மற்றும் கட்டட இடிபாடுகள் தெருக்களில் சிதறுவதை தவிர்க்கும் விதத்தில் அனைத்து வாகனங்களுக்கும் மீன் வலைகள் 2024-2025-ஆம் நிதியாண்டில் கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.**

**73. மண்டலம் 1 முதல் 15 வரையுள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான கழிப்பறைகள் மற்றும் மருத்துவமனைகள் இருக்கும் இடத்தினை பொது மக்கள் அறியவும் மற்றும் அவர்களின் பயன்பாட்டிற்கு ஏதுவாக தனி செயலி அமைப்பது தொடர்பாக.**

**அறிவிப்பு : பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குள் வசிக்கும் / பயணிக்கும் பொது மக்கள் தாங்கள் இருக்கும் இடத்திற்கு அருகாமையில் இருக்கும் பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவமனைகள் மற்றும் பொதுக்கழிப்பிடங்கள் இருக்கும் இடத்தினை அறியும் வகையில் புதிய அலைபேசி வலைதள செயலி உருவாக்கி பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.**

## 74. பேருந்து நிழற்குடை அருகில் குப்பைத் தொட்டிகள் அமைப்பது.

பெருநகர சென்னை மாநகராட்சியால் அமைக்கப்பட்டுள்ள பேருந்து நிழற்குடையின் அருகாமையில் குப்பைகளை பிரித்து போடும் வகையில் இரண்டு எண்ணிக்கையில் குப்பைத் தொட்டிகள் அமைக்க வேண்டியது அவசியமாகிறது.

**அறிவிப்பு : பெருநகர சென்னை மாநகராட்சியால் அமைக்கப்பட்டுள்ள 1,347 நிழற்குடைகளில் பொது மக்களின் பயன்பாட்டிற்கேற்ப குப்பைகளை தரம் பிரித்து கொட்டும் வகையில் புதிய வகையிலான மூடியுடன் கூடிய இரண்டு குப்பைத் தொட்டிகள் வைக்கப்படும். இதற்காக ரூ.1.35 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

## பேருந்து சாலைகள்

**75.** **அறிவிப்பு : பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் (NSMT, TURIF மற்றும் SFC etc.,) திட்டங்களின் கீழ் 4750 எண்ணிக்கையிலான சாலைகள் மற்றும் நடைபாதைகள் மேம்படுத்தும் பணி ரூ.404.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

**76.** **அறிவிப்பு : பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சேதமடைந்த சாலைகளில் ஒட்டுப்பணிகள் மேற்கொள்ள Cold Mix Injection Pot Hole Repairing Machine பெருநகர சென்னை மாநகராட்சியால் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டு ஒப்பந்ததாரர் கொண்டு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்படும்.**

**77.** **பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைகள் தொடங்கும் பகுதியில் உள்ள பிரதான சாலைகளில் வரவேற்பு நுழைவுவாயில்கள் அமைக்கும் பணி.**

வெளி மாநிலங்கள் மற்றும் வெளி மாவட்டங்களிலிருந்து பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்கு வரும் மக்கள், அதன் எல்லை ஆரம்பத்தை தெரிந்து கொள்ளும் விதமாக நுழைவுவாயில்கள் அமைக்கும் பணி உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**அறிவிப்பு : 2024 2025 ஆம் நிதியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைகள் தொடங்கும் கீழ்கண்டுள்ள 5 பிரதான சாலைகளில் நுழைவு வாயில்கள் ரூ.15.00 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும். 1) ECR சாலை, அக்கரை, 2) OMR சாலை, செம்மஞ்சேரி, 3) GST சாலை, மீனம்பாக்கம், 4) Mount Poonamallee சாலை, S.R.M.C மருத்துவமனை, 5) GNT ரோடு, மாரியம்மாள் நகர், புழல்.**

**78. சென்னை மாநகரை அழகுப்படுத்தும் பொருட்டு உயர்மட்ட மேம்பாலத்தின் கீழ் பகுதியினை அழகுபடுத்தும் பணி.**

பெருநகர சென்னை மாநகராட்சியில், 2021-22 மற்றும் 2022-23-ஆம் நிதியாண்டில் சென்னை மாநகரை அழகுபடுத்தும் பொருட்டு, சிங்கார சென்னை 2.0 திட்ட நிதியின் கீழ் பல்வேறு உயர்மட்ட மேம்பாலத்தின் கீழ் அழகுபடுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டது. அதன் தொடர்ச்சியாக 2024-2025-ஆம் நிதியாண்டில், சென்னை மாநகரை அழகுபடுத்தும் நோக்கத்துடன், மண்டலம்-5ல் தங்கசாலை மேம்பாலத்தின் கீழ் பகுதியில் ரூ.65.00 இலட்சம் செலவில் அழகுபடுத்தும் பணியும், மண்டலம்-9ல் பீட்டர்ஸ் சாலை மற்றும் கான்ரான்ஸ்மித் சாலையின் சந்திப்பில் உள்ள மேம்பாலத்தின் கீழ்பகுதியினை ரூ.1.20 கோடி செலவில் அழகுபடுத்தும் பணி மற்றும் வெஸ்ட் காட் சாலையில் உள்ள மேம்பாலத்தின் கீழ் ரூ.1.00 கோடி மதிப்பீட்டிலும் இப்பணியினை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

**அறிவிப்பு : மண்டலம் – 5 தங்கசாலை மேம்பாலத்தின் கீழ் பகுதியில், மண்டலம்–9ல் பீட்டர்ஸ் சாலை, கான்ரான்ஸ்மித் சாலை மற்றும் வெஸ்ட் காட் சாலையில் உள்ள மேம்பாலங்களின் கீழ்பகுதியினை ரூ.2.85 கோடி செலவில் அழகுபடுத்தும் பணி மேற்கொள்ளப்படும்.**

**79. பேருந்து நிழற்குடைகளை தனியார் பங்களிப்புடன் பழுதுபார்த்தல் மேம்படுத்துதல் மற்றும் பராமரிப்பு பணிகள்.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் மொத்தம் 1,341 பேருந்து நிழற்குடைகள் அமைக்கப்பட்டுள்ளன. நிழற்குடைகளில் அவ்வப்போது ஏற்படும் சிறுசிறு பழுதுகளை நீக்கம் செய்வது மற்றும் பராமரிப்புகள் மேற்கொள்ளப்பட்டு

வருகின்றன. மேலும், 637 பேருந்து நிழற்குடைகளில் விளம்பர பலகைகள் பொருத்தப்பட்டு அதன் மூலமாக பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வருவாய் ஈட்டப்படுகிறது.

**அறிவிப்பு : மண்டலம் 1 முதல் 15 வரையில் உள்ள 704 எண்ணிக்கையிலான பேருந்து நிழற்குடைகள் மற்றும் 61 Concessionaire காலம் முடிந்த பேருந்து நிழற்குடைகள், ஆக மொத்தம் 765 பேருந்து நிழற்குடைகள் தனியார் பங்களிப்புடன் (Public-Private Partnership முறையில்) பழுதுபார்த்தல், மேம்படுத்துதல் மற்றும் பராமரித்தல் பணிகளை செய்தும், விளம்பர பலகைகள் பொருத்தியும், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வருவாய் ஈட்டும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும்.**

# மன்றம்

**80. மாண்புமிகு மேயர் சிறப்பு மேம்பாட்டுத் திட்ட மேம்பாட்டு நிதியை உயர்த்தி வழங்குதல்.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் 200 வார்டுகளில் வசிக்கும் மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும் பொருட்டு மாண்புமிகு மேயர் சிறப்பு மேம்பாட்டு திட்டத்திற்காக 2022-2023ஆம் நிதியாண்டில் ரூ.2.00 கோடி, மாண்புமிகு மேயர் அறிவிப்பில் அறிவிக்கப்பட்டது. எனினும் வார்டு மக்களின் அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்வது கடமையாக உள்ளதால், மாண்புமிகு மேயர் மேம்பாட்டு நிதியை உயர்த்த வேண்டியது அவசியமாகிறது.

**அறிவிப்பு : 2024 2025 ஆம் நிதியாண்டு முதல் பெருநகர சென்னை மாநகராட்சி மாண்புமிகு மேயர் சிறப்பு மேம்பாட்டு நிதி ரூ.2.00 கோடியிலிருந்து ரூ.3.00 கோடியாகவும் உயர்த்தப்படும்.**

**81. மாமன்ற உறுப்பினர்களுக்கு வார்டு மேம்பாட்டு நிதியை உயர்த்தி வழங்குதல்.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் 200 வார்டுகளில் வசிக்கும் மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும் பொருட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு, வார்டு மேம்பாட்டு நிதி 2022-2023ஆம் நிதியாண்டில் ரூ.30.00 இலட்சத்திலிருந்து ரூ.35.00 இலட்சமாகவும், 2023-2024ஆம் ஆண்டில் ரூ 40.00 இலட்சமாகவும் உயர்த்தி மாண்புமிகு மேயர் அறிவிப்பில் அறிவிக்கப்பட்டப்பட்டது. எனினும் வார்டுகளில் மக்களின் அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்வது மாமன்ற உறுப்பினர்களின் கடமையாக உள்ளதால், வார்டு உறுப்பினர்களின் மேம்பாட்டு நிதியை உயர்த்த வேண்டியது அவசியமாகிறது.


**அறிவிப்பு : 2024 2025 ஆம் நிதியாண்டு முதல் பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின் வார்டு மேம்பாட்டு நிதி ரூ.40.00 இலட்சத்திலிருந்து ரூ.45.00 இலட்சமாக உயர்த்தப்படும்**

**82. மாமன்ற உறுப்பினர்களுக்கு TAB வழங்குதல்.**

தகவல் தொழில்நுட்பம் வளர்ந்து வரும் இன்றைய காலகட்டத்தில், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 200 வார்டுகளில் உள்ள பொது மக்கள் தங்கள் பகுதிக்கு தேவையான அடிப்படை வசதிகள், அத்தியாவசியமான கோரிக்கைகள் மற்றும் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனைகள் குறித்து மாமன்ற உறுப்பினர்களுக்கு கடிதம் வாயிலாகவும், நேரடியாகவும் மற்றும் மின்னஞ்சல் மூலமாக அளிக்கப்படும் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கும், சுற்றுச்சூழலை பாதுகாத்திடவும் மற்றும் செலவினத்தை குறைத்திடும் வகையிலும், காகிதமில்லா நடைமுறையினை கொண்டு வருவதற்கும் TAB வழங்கலாம்.

**அறிவிப்பு : பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட, மண்டலம்-1 முதல் 15 வரை உள்ள 200 வார்டுகளில் உள்ள பணிகளை மேம்படுத்தவும், காகிதமில்லா நடைமுறையினை கொண்டு வருவதற்கும், அவசியம் கருதியும், ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் 200 எண்ணிக்கையிலான TAB கொள்முதல் செய்து மாமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும்.**

**நன்றி, வணக்கம்.**



G.C.C.P.P 461 / 2023-24 / 400 Bks of 25 Lvs / Feb- 2024